# 1.வளர்ந்து வரும் பொருளாதாரம்

## I.இந்தியப் பொருளாதாரத்தின் இயல்பு

பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு என்று மகாகவி பாரதியார் பெருமையோடு கூறுகின்றார் தாய்த்திரு நாட்டின் பொருளாதாரத்தின் இயல்பை அறிவது இன்றியமையாத தேவையாகும்.

விளக்கம் :

இந்திய பொருளாதாரத்தை விளக்க பொருளியலறிஞர்கள் கையாண்ட சொற்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் நமது பொருளாதாரம் மாறிவந்து இருப்பதை காட்டுகின்றது.
ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் முடங்கிக்கிடந்த பொருளாதாரத்தை பின்தங்கிய பொருளாதாரம் (backward economy ) என்றனர். நாடு விடுதலை அடைந்த பொழுது வளர்ச்சிக்கான இயல்புகள் தலை தூக்கத் தொடங்கின.இருந்தாலும் மேற்கத்திய நாடுகளில் பொது நல முன்னேற்ற தோடு ஒப்பிட்டு இதனை வளர்ச்சி அடையாத பொருளாதாரம் (underdeveloped economy) என்று குறிப்பிட்டனர். இப்போது ஐந்தாண்டு திட்டத்தின் மூலம் அடைந்துவரும் முன்னேற்றத்தை கண்டு வளர்கின்ற பொருளாதாரம் (developing economy)என்று கூறுகின்றனர். இந்த மாற்றத்தை அரிய வரலாற்றுப் பின்புலத்தை நோக்கவேண்டும்.

இந்தியாவிற்கு வாணிபம் செய்ய வந்த ஆங்கிலேயர்களுக்கு இந்த பாரத புண்ணிய பூமி அடிமைப்பட்டது.அதன் விளைவாக பாரதம் தொடர்ந்து இங்கிலாந்தில் தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய மூலப் பொருட்களை விளைவித்து தவறும் வேளாண்மை நாடாக இருந்தது. ஆங்காங்கு சில தொழில்கள் வளர்ந்த போதிலும் இருப்புப் பாதைகள் அமைத்த போதிலும் மக்களின் வாழ்க்கைமுறையை அடிப்படையில் மாற்றும் தொழிற்புரட்சி இங்கு தோன்றவில்லை.

## II.வளர்ச்சிஅடையாப் பொருளாதாரம்

பொருளியல் அறிஞர்கள் நமது பொருளாதாரத்தை அமெரிக்கா போன்ற நாடுகளோடு ஒப்பிட்டு இன்னும் நமது பொருளாதாரம் முழு வளர்ச்சி பெறாத நிலையில் இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றனர். நமது நாட்டில் வளர்ச்சி பெறாத பொருளாதாரத்தின் குறைபாடுகள் எல்லாம் எப்பொழுதும் இருப்பதை விளக்கலாம்.

1. முக்கியத் தொழில் வேளாண்மை
2. குறைவான தொழில் வளர்ச்சி
3. குறைந்த வருவாய் 4. மக்கட்பெருக்கம் 5. மூலதனம் பற்றாக்குறை 6.வேலை இல்லா சிக்கல் 7.தொன்மையான சமுதாய அமைப்பு முறை 8.வாணிப நிலை 9.மிகுதியான ஏற்றத்தாழ்வு 10.மனித வளத்தரக்குறைவு 11. குறைந்த நிலை தொழில்நுட்ப வளர்ச்சி 12.கட்டமைப்புகளில் பற்றாக்குறை 13.பயன்படுத்தா இயற்கை வளங்கள் 14.அமைப்பற்ற பொருளாதாரம்

III.வளர்ச்சி பெற்றுவரும் இயல்புகள்

இந்திய பொருளாதாரம் பின்தங்கி இருந்தாலும் வளர்ச்சியற்றிருக்கின்தென்று கூற முடியாது. கடந்த சில ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி பெற்று இருக்கின்றோம்.நமது பொருளாதாரம் மாறிவருகின்றது காட்டும் அறிகுறிகள் நாடெங்கும் வெளிப்படையாகத் தெரிகின்றன.

இந்திய பொருளாதாரம் வளர்ந்து வருகின்றது என்பதை விலக்க கீழ்கண்டவற்றை சான்றுகளாக கூறலாம்.

1. வேளாண்மையில் மாற்றம்
2. தொழில் வளர்ச்சி
3. வருவாய் பெருக்கம்
4. மூலதன வளர்ச்சி
5. சமுதாய மாற்றம்

2. பொருளாதார முன்னேற்றத்தை தடை செய்யும் காரணிகள்

வளர்ச்சி குறைந்த நாடுகள் பொதுவாக ஏழை நாடுகளாகவே இருக்கின்றன.என்னென்ன காரணங்களால் அவை ஏழ்மையில் தத்தளிக்கின்றன என்பதை இனங் காண்கின்ற பொழுது அவை ஏழ்மையின் விளைவாகவும் இருக்கின்றன. ஏனென்றால் அவை ஒன்றுக்கொன்று தொடர்பு உடையனவாக இருக்கின்றன. ஆதலால் அவை ஒரு நிலையில் காரணங்களாகவும் ஒரு நிலையில் விளைவாகவும் இருக்கின்றன.

வளர்ச்சி குறைந்த நாடுகள் முன்னேறுவதற்கான தடைகளை அறிந்து கொண்டால்தான் அவற்றை நீக்கி முன்னேற இயலும். ஆதலால் இங்கு வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கான தடைகளையும் அவை தொடர்ந்து வளர்ச்சி குறைந்த நிலையில் இருப்பதற்கான பொருளாதார சமுதாய அரசியல் இயற்கை காரணிகளையும் தொகுத்துக் கூறலாம்.

1.வறுமையின் நச்சு ஊழல்

- வறுமையின் நச்சு வட்டச் சுழற்சியை மூலதன தீர்வுகாண தேவையின் பக்கத்தில் அணுகலாம்
- வறுமையில் நட்பு வட்டத்தை மூலதனத்தில் அளிப்பு பக்கத்திலும் காணலாம்.
- வறுமையின் நட்பு வட்டத்தை வளர்ச்சி குறைந்த மனித இயற்கை வளங்களின் நோக்கிலும் விளக்கம்.

2. குறைவான மூலதன ஆக்கமும் முதலீடும்.
3. அந்நிய ஆட்சி
4. நிறைவற்ற அங்காடி நிலைகளும் வளங்களை தவறாக பயன்படுத்துதலும்.
5. வெளிக்காட்டும் விளைவு
6. சமுதாய பண்பாட்டு தடைகள்
7. பன்னாட்டு சக்திகள்
8. மக்கள் தொகை பெருக்கம்
9. அரசியல் காரணிகள்
10. இயற்கை காரணங்கள்.

3.. பொருளாதார முன்னேற்றமும் பொருளாதார வளர்ச்சியும்

I.பொருளாதார முன்னேற்றம் பொருளும் விளக்கமும்

பொருளாதார முன்னேற்றம் என்ற சொல் பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற சில அடிப்படை மாற்றங்களை குறிக்கின்றது.இந்த மாற்றம் புதிய வாய்ப்புக்களையும் வளங்களையும் கண்டு பயன்படுத்துவதிலும் மூலதன ஆக்கத்திலும் வளர்கின்ற மக்கள் தொகையை ஆக்கபூர்வமாக ஈடுபடுத்துவதிலும் சிறந்த தொழில் நுணுக்க உற்பத்தி முறைகளை பின்பற்றுவதிலும் திறமைகளின் வளர்ச்சியிலும் மற்றைய கட்டுக்கோப்பு முன்னேற்றத்திலும் இருக்கலாம்.

டாக்டர் பிரைட்சிங் பொருளாதார முன்னேற்றம் அதனுடைய எழுச்சியில் முக்கியமான சமுதாய நிறுவன அமைப்பு மாற்றங்களை கொண்டு வருகின்றது .நாட்டின் சராசரி உற்பத்தி கூடுவது பொருளாதார வளர்ச்சியில் அடங்கியுள்ளது என்கிறார்.

1. உண்மை நாட்டு வருவாய்: மேயரும் பாட்டு வேணும் அவர்களுடைய பொருளாதார முன்னேற்றம் கோட்பாடு வரலாறு கொள்கை என்னும் நூலில் பொருளாதார முன்னேற்றம் என்பது ஒரு பொருளாதாரத்தின் உண்மையான நாட்டு வருவாய் நீண்டகாலத்தில் கூடுகின்ற வழிமுறையாகும். என்று விளக்குகின்றனர்.உண்மை நாட்டு வருவாய் என்பது நாட்டின் இறுதிநிலை மொத்த உற்பத்தியை குறிக்கின்றது. பணத்தின் மதிப்பை அல்ல உண்மையில் கூடிய பொருட்கள் பணிகளில் அளவை கணக்கில் கொள்கின்றோம். இதில் விலை மாற்றத்தை கணக்கில் கொள்ள வதில்லை. இந்த விளக்கம் முன்னேற்றம் என்பது வழிமுறையாகவும். உண்மை நாட்டு வருவாயை உயர்த்துவதாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

2. சராசரி உண்மை வருவாய்: பேராசிரியர் மேயர் நீண்ட காலத்தில் ஒரு நாட்டின் உண்மையான சராசரி வருவாய் கூடுகின்ற வழிமுறையை பொருளாதார முன்னேற்றம் என்கின்றார்.

3. பொருளாதார நல கண்ணோட்டம்: பொருளாதார நிலை வளர்ச்சி கண்ணோட்டத்தில் உண்மையான தலைவி வருவாய் கூட அதன் மூலமாக வருவாய் ஏற்றத்தாழ்வுகளை குறைந்து மக்களின் பெரும்பாலான விருப்பங்கள் நிறைவேறும் வகையில் வாழ்க்கை தரமும் பொருளாதார நலமும் உயர்கின்ற வழி முறையையே சிலர் பொருளாதார முன்னேற்றம் என்று கருதுகின்றனர். ஓகுன் ரிச்சர்ட்சன் என்பவர்கள் பொருட்கள் பணிகள்

இவைகளில் அதிகரிக்கின்ற பெருக்கத்தில் பெறுகின்ற தொடர்ந்த நீண்ட பருப்பொருள்கள் சார்நல முன்னேற்றமே பொருளாதார முன்னேற்றம் என்கின்றனர்.

நிறைவுரை:மொத்த நாட்டு வருவாய் சராசரி உண்மை வருவாய் கூடுதல் பொருளாதார நலம் பெறுதல் ஆகிய மூன்றும் பொருளாதார முன்னேற்ற கருத்து விளக்கங்களில் சராசரி உண்மை வருவாய் கூறுவதிலிருந்தே பொருளாதார முன்னேற்றத்தை அடையலாமென்ற கருத்தையே பெரும்பாலான பொருளியலறிஞர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

## II.பொருளாதார முன்னேற்றமும் பொருளாதார வளர்ச்சியும்

பொருளாதார முன்னேற்றம் பொருளாதார வளர்ச்சி என்னும் சொற்கள் ஒரே பொருளை உணர்த்துவது போல ஆனால் ஷும்பீட்டர் திருமதி உர்சுலா ஹிக்ஸ் போன்ற பொருளியறிஞர்கள் பொருளாதார முன்னேற்றம் பொருளாதார வளர்ச்சி ஆகியவை இடையிலுள்ள நுண்ணிய வேறுபாடுகளை விளக்கியுள்ளனர்.

பொருளாதார முன்னேற்றம் என்பது வளர்ச்சி குன்றிய நாடுகளில் பொருளாதார சிக்கலை பற்றிய ஆய்வினை குறிப்பிடுகின்றது. பொருளாதார வளர்ச்சி என்பது முன்னேறிய நாடுகளின் பொருளாதார சிக்கல்களை பற்றிய ஆய்வினை சுட்டிக்காட்டுகின்றது. அதாவது வளர்ச்சி குன்றிய நாடுகள் ஏழ்மையில் இருந்தும் பின்தங்கிய நிலையில் இருந்தும் விடுபட்டு வளர்வதை முன்னேற்றம் என்கின்றனர். வளர்ச்சி பெற்ற நாடுகள் மேலும் முன்னேறுவதை வளர்ச்சி என்று கூறுகின்றனர்.

ஷும்பீட்டரின் கருத்துப்படி முன்னேற்றம் என்பது தேக்க பொருளாதாரத்தின் தொடர்பின்றி தன் விருப்பத்தோடு தோன்றுவதாகும். வளர்ச்சி என்பது நீண்ட காலத்தில் தொடர்ந்து நிலையான மாற்றத்தை ஏற்படுத்துவதாக இருக்கும்.

திருமதி ஹிக்சின் கருத்துப்படி வளர்ச்சி குன்றிய நாடுகள் பயன்படுத்தாத வளங்கள் இருக்கும். அவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்று தெரிந்தாலும் பயன்படுத்த இயலாமல் இருப்பார்கள் அவற்றை பயன்படுத்தி வருவாயையும் வாழ்க்கை தரத்தையும் உயர்த்துவது முன்னேற்றமாகும். வளர்ச்சி பெற்ற நாடுகள் அவற்றின் பெரும்பாலான வளங்களை முன்னதாகவே நன்கறிந்து வளர்ந்திருக்கும். அவற்றை தக்க வகையில் மேலும் பயன்படுத்தி காண்பதே வளர்ச்சி ஆகின்றது.

பொருளாதார முன்னேற்றமும் பொருளாதார வளர்ச்சியும் ஒன்றென்று கூறும் வகையிலும் சிலர் கருத்துக்களை கூறியுள்ளனர். எடுத்துக்காட்டாக மாடிசன் வருவாய் நிலைகள் கூடுவதை செல்வச்செழிப்பான நாடுகளில் பொதுவாக பொருளாதார வளர்ச்சி என்றும் ஏழை நாடுகளில் பொருளாதார முன்னேற்றம் என்றும் கூறுகின்றோம் என்கிறார். பொருளியல் அகராதி ஒன்று பொருளாதார முன்னேற்றத்தையும் பொருளாதார வளர்ச்சியையும் விளக்குகின்றது. அதன்படி பொருளாதார முன்னேற்றம் என்பது பொருளாதார வளர்ச்சியை தான் குறிக்கின்றது. குறிப்பாகச் சொல்லப்போனால் வளர்ச்சிக்கேற்ற பொருளாதாரம் பிற சமுதாய மாற்றங்களையே முன்னேற்றம் என்றும் சொல் சுட்டி காட்டுகின்றது. வளர்ச்சி என்பது அளக்கக்கூடியதாகவும் காணக் கூடியதாகவும் இருக்கும். பொருளாதார முன்னேற்றம் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துத் தருகின்றது. இரண்டிலும் பாரன் சுட்டிக் காட்டுவதை போல பழைய நிலையில் இருந்து புதிய பொருளாதாரம் நிலைக்கு பொருளாதாரம் மாறிசெல்கின்றது.

மொத்தத்தில் பொருளாதார முன்னேற்றம் வளர்ச்சி தேர்ச்சி ஆகிய சொற்களை ஏறத்தாழ ஒன்றுபோலவே பயன்படுத்துகின்றோம்.

4.பொருளாதார முன்னேற்றத்திற்கான காரணிகள்

பொருளாதார முன்னேற்றம் என்பது ஒரு சிக்கலான வழி முறை. ஒரு நாட்டின் முன்னேற்றம் பல்வேறு காணிகளை சார்ந்து அமைகின்றது. அத்தகைய காரணிகளை பொருளாதார காரணிகள் பொருளாதார மற்ற காரணிகள் என்று பிரிக்கலாம். இவை பொருளாதார வளர்ச்சியின் அளவை நிர்ணயிக்கும் ஆற்றல்மிக்க சக்திகள் ஆக இருப்பதால் இவற்றை தனித்தனியாக விளக்கலாம்.

I.பொருளாதார காரணிகள்

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை பல்வேறு வகையான பொருளாதார காணிகள் கட்டுப்படுத்துகின்றன. இயற்கை வளங்கள் மனித வளங்கள் மூலதனம் தொழில் முயற்சி என்றும் முன்னேற்றத்திற்கான துணை செய்கின்ற காரணிகளை தொகுத்து கூறலாம்.

1. இயற்கை வளங்கள்
2. முதல் ஆக்கமும் முதலீடும்
3. மனித வளங்கள்
4. வேளாண்மையில் எச்ச உற்பத்தி
5. வெளிநாட்டு வாணிபம்

6. தொழில் முயல்வோர்கள்
7. தொழில்நுட்ப அறிவு
8. பொருளாதார அமைப்பு முறை

ii.பொருளாதார மற்ற காரணிகள்

பொருளாதார காரணிகளை போன்றே பொருளாதார மற்ற காரணிகளும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பங்கு பெறுகின்றன பொருளாதார மற்ற காரணிகள் சமுதாய நிறுவனங்கள் பண்பாட்டு மனப்பான்மைகள் அரசியல் சூழ்நிலை போன்றவை அடங்கும் பேராசிரியர் கால்டர் பொருளாதார வளர்ச்சியின் இயக்கம் பற்றி ஆய்வு பொருளாதார காரணிகளின் ஆய்வுக்கும் அப்பால் இந்த காரணிகளை பற்றிய ஆய்வுக்கு வழி நடத்துகின்றது என்று கூறுகின்றார்.

1. வளர்ச்சி வேட்கை
2. பண்பாட்டுக் கண்ணோட்டம்
3. அரசியல் சூழ்நிலை
4. ஞாயமான சமுதாய அமைப்பு முறை
5. பொதுக் கல்வி வளர்ச்சி

## UNIT-2

### 1.மனித வளம்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அந்த நாட்டிலுள்ள மக்கள் தொகைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு நாட்டின் பொருளியலை அறிய நாட்டின் இயற்கை வளங்களை அறிவதை போலவே மக்களின் எண்ணிக்கைகளையும் அதன் வளர்ச்சி விகிதத்தையும் மேற்கொண்டுள்ள தொழில் முறையையும் நிலப்பரப்பில் பங்கீட்டு முறையையும் நெருக்கத்தையும் தெரிந்துகொள்ளவேண்டும் மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட மக்களின் எண்ணிக்கை வளர்ச்சியை விட மிகுந்த வேகமான பொருளாதார முன்னேற்றம் தேவை

மக்கள் பெருக்கம் மிகுந்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று 2001 ஆம் ஆண்டின் மக்கள் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 102.7 கோடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர் உலகில் மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தியாவிற்கு இரண்டாவது இடம் கிடைக்கின்றது.

I. மக்கள் பெருக்கம்

கடந்த 50 ஆண்டுகளில் 66 கோடிக்கு மேல் மக்கள்தொகை அமைந்திருப்பதை அறியலாம் 1911 ஆம் ஆண்டிற்கு 1521 ஆம் ஆண்டிற்கும் இடையில் ஒரு நச்சு காய்ச்சலால் மக்கள் இழந்ததால் அந்த காலத்தில் மட்டும் வளர்ச்சி மிக குறைந்திருக்கிறது 1921 ஆம் ஆண்டிற்குப் பிறகு வளர்ச்சியின் வேகம் மிகுந்துள்ளது 2001 ஆம் ஆண்டில102.7 கோடி மக்கள் தொகை ஆகும்.2018ஆம் ஆண்டில் 135.26
கோடியாகும். 2020 ஆம் ஆண்டில் 138 கோடியாகும். தற்போது 1.1 சதவீதம் ஆகும்.

மக்கள் தொகை பெருக்கம் மாற்ற நிலைகள்

மக்கள் தொகை பெருக்கம் மாற்ற கோட்பாட்டின்படி மூன்று நிலைகள் இருக்கும் முதலாவது நிலையில் நாட்டின் பொருளாதாரம் தொன்மையாக வேளாண்மை நிலையில் இருக்கும் இந்நிலையில் இறப்பு விகிதமும் இறப்பு விகிதமும் மிகவும் அதிகமாக இருக்கும் இரண்டாவது நிலையில் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பெற பிறப்பு விகிதம் அதிகமாகவும் இறப்பு விகிதம் குறைவாகவும் இருக்கும் மூன்றாவது நிலையில் பொருளாதாரம் மேலும் வளர பிறப்பு விகிதம் மேலும் குறைந்து விடும் இந்திய மக்கள் தொகை பெருக்கத்தில் இப்பொழுது இரண்டாம் நிலையில் இருக்கின்றது

பிறப்பும் இறப்பும்:

ஒரு நாட்டின் மக்கள் பெருக்கம் அந்த நாட்டின் குழந்தைகளின் பிறப்பு எண்ணிக்கையையும் மக்களின் இறப்பு எண்ணிக்கையையும் ஒட்டி அமைந்தது நமது நாட்டின் பிறப்பும் இறப்பும் பிற நாடுகளோடு ஒப்பிடுகையில் மிகுதியாக இருக்கின்றது 1991 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் கணக்கெடுப்பு ஆண்டிற்கு ஆயிரம் பேருக்கு 325 குழந்தைகள் பிறக்கின்றன வேண்டும் சுமார் 114 பேர் இறக்கின்றனர் என்றும் கூறுகின்றது 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி பிறப்பு விகிதம் 21.8 இறப்பு விகிதம் 7.1 ஆகும் 2020 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி பிறப்பு விகிதம் 18.2 இறப்பு விகிதம் 7.3 ஆகும்.

பிறப்பு விகிதம் அதிகமாக இருப்பதற்கான காரணங்கள்:

1. நமது நாட்டின் தட்பவெப்ப நிலையால் பிறப்பு விகிதம் அதிகமாக இருக்கின்றன 2. சமுதாய அமைப்பு முறை 3. இளம் வயது

திருமணம் 4. மக்களின் சமய நோக்கு 5. ஒரு குழந்தைக்கும் அடுத்த குழந்தைக்கும் இடையில் போதுமான இடைவெளி 6.கூட்டுக் குடும்ப அமைப்பு முறை7. வறுமை 8. பெண்களின் பிற்போக்கான நிலை

இறப்பு விகிதம் அதிகமாக இருப்பதற்கான காரணங்கள்:

1. மருத்துவ வசதியின்மை இளம் வயது திருமணம் நமது நாட்டில் குழந்தைகள் இறப்பும் பேறுகாலத்தில் தாய்மார்களின் இழப்பும் அதிகமாக இருக்கின்றன இதற்கு போதுமான மருத்துவ வசதிகள் இன்மை காரணமாகும்.

2.மக்களிடம் உள்ள கண்மூடி பழக்க வழக்கங்களாலும் அறியாமையினாலும் மரண விகிதம் அதிகமாகின்றது அம்மை காலரா காய்ச்சல் போன்ற நோய்களை வழிபாடு மூலமாக தவிர்த்துவிட நினைக்கின்றனர்3.வறுமையின் காரணமாக பெரும்பாலான பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு சத்தான உணவு அளிக்க முடிவதில்லை இதனால் இறப்பு விகிதம் அதிகமாக இருக்கிறது.4.நகரங்களில் வசதி குறைவான வீடுகளில் வாழ்வதும் கிராமங்களில் காணப்பெறும் சுகாதார குறைபாடுகளும் நோய்கள் பெருகுவது மரணங்கள் விளைய காரணங்களாகின்றன.

## II. மக்கட் செறிவு

நமது நாட்டில் மக்கள் சரிவு மிகுதி என்பதை பிறநாடுகளில் ஒரு சதுர மைலில் வாழும் மக்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுவதன் மூலம் அறிந்து கொள்ளலாம் இந்தியாவில் ஒரு சதுர மைல் இல் 370 பேர் வாழ்கின்றனர் தற்போது 2011ஆம் ஆண்டு கணக்கின்படி 382 பேர் வசிக்கின்றனர.ரஷ்யாவில் 23 பேரும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஐம்பது பேரும் சீனாவில் நூத்தி முப்பத்தி நாலு பேரும் பிரான்சில் 193 பேரும் வாழ்கின்றனர். மக்கள் சரிவு மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின் படி டெல்லி சண்டிகர் லட்சத்தீவு பாண்டிச்சேரி ஆகிய பகுதிகளில் சதுர கிலோ மீட்டரில் 1894 பேருக்குமேல் வாழ்கின்றனர் இது மேற்கு வங்காளத்தில் 904 பேரும் பீகாரில் 880 பேரும் கேரளாவில் 819 பேரும் உத்திரபிரதேசத்தில் 689 பேரும் பஞ்சாபில் 482 பேரும் கேரளாவில் 478 பேரும் மேற்கு வங்காளத்தில் 766 பேரும் தமிழ்நாட்டில் 428 பேரும் இமாச்சல பிரதேசத்தில் 109 பேரும் ஜம்மு-காஷ்மீரில் 99 பேரும் வாழ்கின்றனர்.

III. மக்கள் தொகையும் பொருளாதார வளர்ச்சியும்:

மக்கள் தொகை பெருக்கம் இரு வழிகளில் பொருளாதார வளர்ச்சி வேகத்தை தடை செய்கின்றது.

1. கிடைக்கின்ற நிலத்தின் அளவு குறைதல் 2. மூலதன ஆக்கம் வளர்ச்சி குறைவு.

.

IV. தீர்வுகள்

இந்தியாவில் மிகுதியாக இருக்கும் மக்கள் தொகை சிக்கலுக்கு தீர்வு காண வேண்டிய வழிமுறைகளை ஆராய்ந்து அறிந்து பின்பற்ற வேண்டும் பொருளாதாரக் கோட்பாட்டை ஒட்டி ஒரு நாட்டின் மக்கள் தொகை சிக்கலுக்கு 1. உள்நாட்டு குடிப்பெயர்ச்சி 2. வெளிநாட்டு குடியேற்றம் 3. வேளாண்மை மூலம் உணவு உற்பத்தியை பெருக்குதல் 4. தொழில் மயமாக்குதல் 5.கட்டுப்பாடுகள் மூலம் மேலும் மக்கள் தொகை வளராமல் தடுத்தல் ஆகிய வழிமுறைகளை பின்பற்றி காலப்போக்கில் தீர்வு காணலாம் என்று பொருளியல் அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

V. மக்கள் தொகை கொள்கை:

ஒரு நாட்டிற்கு ஏற்ற மக்கள்தொகை கொள்கையை உருவாக்குவது எளிதல்ல விரைவாக மக்கள்தொகை பெருகுவதால் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் முழு பலன் நமக்கு கிடைக்கவில்லை ஆதலால் இதற்கேற்ற வகையில் ஒரு மக்கள் தொகை கொள்கையை உருவாக்கிக்கொள்வது இன்றியமையாத தேவையாகும்.

குடும்ப நலத்திட்டம்: மக்கள் தொகையை சிக்கலைத் தீர்க்க தொழில்களைப் பெருக்குதல்வேளாண்மையை முன்னேற்றுதல் வறுமையை ஒழித்தல் நாட்டு வருவாயை சீராகப் அங்கு கல்வி வழங்குதல்பெண்கள் நிலையை உயர்த்துதல் குடும்பக்கட்டுப்பாட்டை பின்பற்றுங்கள் என்று பல்வேறு வழிமுறைகளை கூறினாலும் நமது நாட்டின் குடும்ப கட்டுப்பாட்டின் மூலம் பிறப்பு விகிதத்தை குறைப்பதற்கு முதலிடம் தருகின்றனர் மக்களிடம் அறியாமையை மிகுதியாக இருப்பதால் குடும்ப நல திட்டத்தை செயல்படுத்துவதில் முழு வெற்றி பெற இயலவில்லை.

நமது அரசின் மக்கள் தொகை கொள்கையின் மையக்கருத்தாக குடும்ப நலத்திட்டம் இருக்கின்றது திட்டமிடல் தொடங்கிய முதல் பத்தாண்டு காலத்தில் குடும்ப கட்டுப்பாடு பற்றி மக்களின் கருத்தை அறிய ஒரு விரிவான விசாரணை நடத்தினர்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே குடும்ப கட்டுப்பாடு பற்றிய சிந்தனை இடம்பெற்றது இதற்காக 65 லட்சம் ரூபாய் ஒதுக்கினர்.

நான்காம் ஐந்தாண்டு திட்டம் காலத்தில் 1969 முதல் 1974 குடும்ப நலத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து அரசன் 330 கோடி ரூபாய் ஒதுக்கியது.

ஐந்தாம் ஐந்தாண்டு திட்டத்தில் அரசு பின்பற்றிய முறைகளில் பெரிய மாற்றம் ஏற்பட்டது முதலாவதாக குடும்ப நல திட்டத்தை சுகாதாரம் பேறு காலம் குழந்தை நலம் சத்துணவு ஆகிய எல்லாவற்றையும் சேர்த்து செயல்படுத்த தீர்மானித்தனர்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மக்களின் கருத்துகளை மாற்றி கல்வியறிவை புகட்டி விரும்பி அவர்கள் குடும்ப நலத் திட்டத்தை மேற்கொள்ள செய்யும் வகையில் கொள்கைகளை உருவாக்கினார்.

புதிய தேசிய மக்கள் தொகை கொள்கை: இந்திய அரசு 2000 இல் ஒரு முழுமையான எல்லாவற்றையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் தொகையை கொள்கையை ஏற்றுக்கொண்டது.

செயல்முறை : சமுதாய மக்கள் தொகை திட்டத்தை செயல்படுத்துவதில் பின்தங்கியிருக்கும் மாநிலங்களில் மக்கள் தொகை கொள்கையை விரைந்து செயல்படுத்த அதிகாரமிக்க செயலாக்க குழு ஒன்றினை சுகாதார குடும்ப நல அமைச்சகத்தில் உருவாக்கினர்.

மக்கள் தொகை காண தேசிய குழு தலைமை அமைச்சரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

1996 முதல் மக்கள் பிறப்பு குழந்தைகள் ஆரோக்கிய திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகின்றது.
1985 இல் எல்லா வகை தொற்றுநோய் தடுப்பு திட்டத்தை செயல்படுத்த தொடங்கினர்.
குழந்தைகள் பேறுகாலத்தில் தாய்களின் இழப்புகளை தவிர்க்கும் வகையில் ஆறு நோய்களை தவிர்க்க தற்காப்பு தடுப்பூசிகள் போட பெற்றன.

1995 முதல் போலியோ சொட்டு மருந்து நாடெங்கும் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மதிப்பீடு : நமது மக்கள்தொகை கொள்கையில் மூன்று அடிப்படை குறைபாடுகளை திறனாய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். 1.தடுப்புமுறை களுக்கு அதிக முக்கியத்துவம்2. கட்டாய முறைகள் 3. அடிக்கடி மாற்றுதல்.

நிறைவுரை:மக்கட் பெருக்கமும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன இதனை உணர்ந்து ஒரு பக்கம் பொருளாதார முன்னேற்றத்திலும் மறுபக்கம் மக்கள் தொகையை கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்தினால் சிறந்த வெற்றியைப் பெறலாம்

2.இந்தியாவின் நாட்டு வருவாய்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் போக்கையும் வளர்ச்சி நிலையையும் அறிய அந்த நாட்டின் வருவாய் பற்றிய புள்ளிவிவரங்கள் துணை செய்கின்றன நாட்டின் மொத்த வருவாய் வருவாய் தலா வருவாய்போன்றவற்றிலிருந்து மக்களின் வாழ்க்கை தரத்தை அறியலாம்.

. நாட்டின் வருவாயைப் பொருளியல் அறிஞர்கள் பல வழிகளில் விளக்குகின்றனர் பொதுவாக ஓராண்டு காலத்தில் ஒரு நாட்டில் ஆக்கப்படும் பொருட்களின் மொத்த மதிப்பை தேசிய வருவாய் என்கிறோம் பல்வேறு உற்பத்தி காரணிகளில் உடைமையாளர்கள் வாரமாகவும் கூலியாகவும் லாபமாக பெறுகின்ற வருவாய் களின் மொத்த தொகுப்பே நாட்டு வருவாய் என்று கூறுவதுண்டு தேசிய வருவாய் கொள்ளும் தேசிய வருவாய் மதிப்பீடு இரு முறை கணக்கிட படாமல் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஆக்கப் பெற்ற பொருட்களின் பணிகளின் தொகுதியை கணிக்கின்றது என்று கூறுகின்றது நமது நாட்டில் ஏப்ரல் முதல் நாள் முதல் மார்ச் 31 ஆம் தேதி முடிய ஓராண்டாக கொண்டு நாட்டின் வருவாயைப் மதிப்பிடுகின்றனர்

கணக்கிடும் முறைகள்: .

நாட்டின் வருவாயை மூன்று முறைகளில் கணக்கிடலாம் முதலாவதாக ஓர் ஆண்டில் நாட்டின் பல்வேறு துறைகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களின் பணிகளின் நிகர மதிப்பை கூட்டி நாட்டின் வருவாயை கணக்கிடுவது உற்பத்தி முறை இரண்டாவதாக வாரம் கூலி வட்டி லாபமாக நாட்டு மக்கள் பெறுகின்ற வருவாய் களின் கூட்டு தொகையின் மூலம் நாட்டின் வருவாயைப் கணிப்பது வருவாய் முறை மூன்றாவதாக நாட்டு மக்கள் நுகர்வும் உற்பத்திக்காகவும் செலவிடுவதை

கூட்டியும் நாட்டின் வருவாயை மதிப்பிடலாம் இதனை செலவு முறை என்கிறோம் மூன்று முறைகளாலும் கணக்கிடுகின்றனர் வாய் ஒன்றாகவே இருக்கும் ஒவ்வொரு நாடும் தன் பொருளாதாரத்தின் இயல்புக்கேற்ப நாட்டின் வருவாயை கணக்கிட ஏதாவது ஒரு முறையை பின்பற்றுகின்றது நமது நாட்டில் டாக்டர் வி கே ஆர் வி ராவ் அவர்களின் கருத்துப்படி உற்பத்தி முறையையும் வருவாய் முறையையும் இணைத்து தேசிய வருவாயை மதிப்பிடுகின்றனர்.

சிக்கல்கள்:

நமது நாட்டில் தேசிய வருவாயை கணக்கிடுவதில் பலவகையான சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியது இருக்கிறது.

1. கட்டுக்கோப்பாக பொருளாதாரம் 2. கணக்கில்லை 3. பணிகள் வேறுபாடின்மை4. குறைவான புள்ளி விவரங்கள்

மதிப்பீடு:. நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே பல பொருளியல் அறிஞர்கள் நமது நாட்டின் வருவாயைப் மதிப்பிட்டுள்ளனர் 1868 தாதாபாய் நவரோஜி ஒரு இந்தியரின் சராசரி ஆண்டு வருவாய் ரூபாய் 20 என்று மதிப்பிட்டார் பின்லே கிராஸ் 49 என கணக்கிட்டால் டாக்டர் வி கே ஆர் வி ரா வின் மதிப்பீட்டின்படி 1931 32 தல வருவாய் ரூபாய் 65 ஆயிரத்து தொள்ளாயிரத்து 42 43 இல் தலாவருவாய்ரூபாய் 114 ஆகவும் இருந்தது.

நாடு விடுதலை பெற்ற பிறகு சரியான தேசிய வருவாயை கணக்கிட வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்தது ஆதலால் 1949 ஆகஸ்ட் 4 ஆம் தேதி பேராசிரியர் பிசி மகலன் ஓபிஸ் தலைமையில் தேசிய வருவாய் குழு நியமிக்கப்பட்டது இந்தக் குழுவில் பேராசிரியர் டி ஆர் காட்கில் டாக்டர் வி கே ஆர் வி ராவ் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர் இதன் முதல் அறிக்கை 1951 ஆம் ஆண்டிலும் இறுதி அறிக்கை 1954 ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டது

தேசிய வருவாய் பகிர்வு:

வேளாண்மை காடுகள் மீன்வளம்ஆகியவற்றை உள்ளடக்கிய முதன்மை துறையின் வருவாய் என் பங்கு 1950 51 55 புள்ளி 3 சதவீதமாக இருந்தது 1998 99 24.5 சதவீதமாக குறைந்தது 2.சுரங்கம் தொழில்கள் மின்சாரம் வாயு கட்டுமான தொழில்கள் ஆகியவற்றை உள்ளடக்கி இரண்டாம் நிலை துறையின் பங்கு 50 ஆண்டு காலத்தில் 16.1 சதவீதத்திலிருந்து தொடர்ந்து கூடி 28.5 சதவீதமாக உள்ளது 3. வாணிபம் போக்குவரத்து செய்தித் தொடர்பு ஆயுள் காப்பீடு வங்கித்தொழில் நிலம்

பணிகள் ஆகியவற்றை கொண்ட மூன்றாம் நிலை துறையின் பங்கு 50 ஆண்டு காலத்தில் 28.6 சதவீதத்திலிருந்து 47 சதவீதம் ஆக கூடியுள்ளது இது வாணிபம் பிற சேவை பணிகளில் பங்கு கூடி இருப்பதை காட்டுகின்றது

நாட்டு வருவாயில் அரசுத் துறையின் பங்கு 1950 51 7.6 சதவீதமாக இருந்தது 2000 2001 24.9 சதவீதமான கொடி இருக்கின்றது அரசும் பொது துறையும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்ந்து கூடி வருவதை இது காட்டுகின்றது.

திட்டக் காலத்தில் தேசிய வருவாயும் தலைவீத வருவாயும்:

நாடு விடுதலை பெற்ற பிறகு அரசு வருவாய் பற்றிய புள்ளி விவரங்களை தொகுத்து வெளியிடுகின்றது இத்தகைய புள்ளிவிவரங்கள் இவை ஒன்று நடப்பவை மற்றொன்று 1980 81 விலைகளின் அடிப்படையில் கணக்கிட பெற்ற புள்ளி விவரங்கள் இப்போது மத்திய புள்ளி விவர நிறுவனம் நாட்டு வருவாய் பற்றிய புள்ளிவிவரங்களை முறைப்படி சேகரித்து வெளியிடுகிறது

1950 51 முதல் 1981 வரை 30 ஆண்டு காலத்தில் நாட்டு வருவாயின் ஆண்டு சராசரி வளர்ச்சி வீதம் 3.4 சதவீதமாகவும் வருவாய் வளர்ச்சி வீதம் 1.2 சதவீதம் ஆகும் இருக்கின்றன 1980 81 முதல் 1990 91 வரை 10 ஆண்டுகளில் நாட்டு வருவாய் வளர்ச்சி விகிதம் 5.3 சதவீதமாகவும் வருவாய் வளர்ச்சி விகிதம் 3.1 சதவீதமாகவும் உள்ளன இதிலிருந்து நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் இருப்பதை அறிந்து கொள்ளலாம்.

மாநிலங்களுக்கு இடையில் வருவாய் வேறுபாடு:

நமது நாட்டில் எல்லா மாநிலங்களிலும் வருவாய் ஒன்றுபோல் இல்லை பெரும்பாலான மக்கள் தொழில் துறையில் ஈடுபட்டிருக்கும் மாநிலங்களில் சராசரி வருவாய் மிகுதியாகவும் வேளாண்மை முக்கியத் தொழிலாக இருக்கும் மாநிலங்களில் வருவாய் குறைவாக இருக்கின்றது

பஞ்சாப் மகாராஷ்டிரா ஹரியானா குஜராத் ஆகிய மாநிலங்களில் தலா வருவாய் இந்திய தேசியத்தை வருவாயை விட அதிகமாக இருக்கின்றது பஞ்சாபில் சராசரிதலாவீதவருவாய் ரூ7411எட்டாவது இடத்தில் இருக்கும் தமிழ்நாட்டு மக்களின் சராசரி வருவாய் 4148 பீகார் மாநிலம்தான் இறுதி நிலையில் உள்ளது.

குறைவான வருவாய்:

நமது நாட்டின் மொத்த வருவாயும் பலவித வருவாய் திட்ட காலத்தில் தொடர்ந்து கூறி வந்தபோதிலும் உலக நாடுகளோடு ஒப்பிடும் பொழுது நமது நாட்டு வருவாய் குறைவாகவே உள்ளது உலக நாடுகளில் தருவாயில் ஜப்பான் முதல் நிலையிலும் அமெரிக்கா இரண்டாம் நிலை இன்னும் சிங்கப்பூர் மூன்றாம் நிலையிலும் சீனா எட்டாம் நிலையிலும் இந்தியா ஒன்பதாம் நிலையிலும் இருக்கின்றன.

வருவாயில் உலகில் பல நாடுகளை விட நமது வருவாய் மிகவும் குறைவாக இருக்கின்றது இதற்கு முக்கிய காரணங்களாக ஆண்டுதோறும் மக்கள் தொகை 2.5 சதவீதம் போடுவது நாட்டின் பல பகுதிகள் அடிக்கடி வறட்சிப் உள்ளாவது தொழில் வாணிபமும் திட்டமிட்டபடி தெரியாதது ஆகியவற்றை கூறலாம் உலக நாடுகளோடு சேர்ந்து நாமும் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்றால் நாட்டு மக்களின் உன்னை வருவாயை உயர்த்த தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## 3.வறுமைச் சிக்கல்

வறுமை விளக்கம்

இந்தியாவை நீண்ட காலமாக தொடர்ந்து வருகின்ற சிக்கல்களில் ஒன்று வாட்டும் வறுமை நமது திட்டத்தின் நோக்கமாக அமைந்தது இந்தியாவின் தீர்க்கப்படாத சிக்கலாக இருப்பதால் அதனைப்பற்றி ஆராய்வதும் தீர்க்கும் வழிமுறைகளை தெளிவாக அறிவதும் தேவையாகின்றது.

வறுமை கருத்து விளக்கம்:

வறுமை இல்லாமை உடலை மட்டுமின்றி உள்ளத்தையும் வாட்டுகின்ற ஒரு கொடுமையான நோய் ஆதலால்தான் வான்புகழ் வள்ளுவர்.

"நெருப்பினுள் துஞ்சலும்ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது"

என்று கூறுகின்றார் அதாவது ஒருவன் தீயில் இருந்துகொண்டு கூட தூங்கி விடலாம் ஆனால் வறுமை நிலையில் கண்ணை மூடுதல் கூட இயலாது இதனை சொற்களால் விளக்க முடிவதில்லை.

வறுமை ஒரு பொருளாதார சிக்கலாக வடிவ எடுப்பதால் பொருளியல் அறிஞர்கள் வறுமையை திட்டவட்டமாக விளக்க முயல்கின்றார்கள் பொதுவாக தேவையான அளவு உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் இல்லாமல் அல்லர் படுகின்ற நிலையை வறுமை என்கிறோம்.அடிப்படை தேவைகள் நிறைவு பெறாத அதாவது குறைந்த அளவு வாழ்க்கை தரத்திற்கு கீழான நிலையில் உள்ளவர்களை வறுமையில் வாடுகின்ற அவர்களாக கருதுகின்றோம்.

பொருளியல் அறிஞர்கள் வறுமை கோடு எது என்பதை வரையறுத்து அதற்குள் வாழ்கின்ற அவர்களின் எண்ணிக்கையை மதிப்பிட முயல்கின்றனர் மக்கள் உயிர் வாழ்வதற்கு வேண்டிய தானியம் பருப்பு வகைகள் பால் சர்க்கரை எண்ணெய் போன்றவற்றை குறைந்த அளவு தேவை இந்த பொருட்களை வாங்க அவற்றின் விலைகளை ஒட்டி செய்ய வேண்டிய நுகர்வோர் செலவு ஆகியவற்றின் அடிப்படையில் வறுமைக் கோட்டை நிர்ணயிக்கின்றனர் இந்த அளவுக்கு கீழ் செலவிடுபவர்கள் எல்லாம் பொருளாதார அளவுகோலின்படி வறுமையின் பிடிக்குள் வாழ்பவர்கள் ஆவார்கள்.

வறுமை ஏற்றத்தாழ்வு அளவு:. நமது நாட்டில் பல பொருளியல் வல்லுநர்கள் வறுமையைப் பற்றி ஆய்ந்து வறுமைக்கோட்டிற்கு வாழ்பவர்களின் எண்ணிக்கையை மதிப்பிட்டுள்ளனர் அவற்றில் முக்கியமான வற்றை குறிப்பிடலாம்.

1. பிடி.ஓஷாவின் மதிப்பீடு:இவரின் மதிப்பீட்டின்படி கிராமங்களில் 184 மில்லியன் மக்களும் நகர மக்களில் 6 மில்லியன் பேரும் மொத்தத்தில் 190 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாக கணக்கிட்டார்.

2.தாண்டேகரும் இராத்தும் நடத்திய ஆய்வு: இவர்களது கணக்கீட்டின்படி 1960 61 170 மில்லியன் பேர் வறுமைக் கோட்டில் கீழ் இருந்தனர் 1968இல் கிராம மக்களில் 166 மில்லியன் பேரும் நகர மக்களில் 49 மில்லியன் பேரும் மொத்தத்தில் இருநூற்று 15.5 மில்லியன் மக்கள் வறுமையில் வாடுவதாக மதிப்பிட்டனர்.

3. கிராம ஏழ்மை பற்றிய மின்ஹாவின் ஆய்வு இவரது ஆய்வின் படி 215 மில்லியன்கிராம மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்ந்தனர்.

4. பர்தானின் ஆய்வு: 1960 61 கிராம மக்களின் 35 சதவீத மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் இருந்தனர் இந்த எண்ணிக்கை 54 சதவீதமாக கூடியது.

5. இந்திய திட்டக் குழுவின் மதிப்பீட்டின்படி வறுமைக் கோட்டை கிராமங்களில் வாழ்பவர்களுக்கு நாளொன்றுக்கு சராசரி 2400 கலோரிகளும் நகரங்களில் வாழ்பவர்களுக்கு நாளொன்றுக்கு சராசரி 2100 கலோரிகளும் தேவை என்ற அடிப்படையில் 1973 74 தல ஆண்டாகக் கொண்டு கிராமங்களில் சராசரி ரூபாய் 49.10க்கும்; நகரங்களில் சராசரி ரூ56.60க்கும் குறைவாக வருவாய் உள்ளவர்களை வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் ஆக கணக்கிட்டுள்ளனர்

6.வல்லுனர்கள் மதிப்பீட்டின்படி 1998இல் கிராமங்களில் 45.2 சதவீதத்தினரும் நகரங்களில் 34.6 சதவீதத்தினரும் மொத்தத்தில் 43 சதவீத மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர்.

வறுமைக்கான காரணங்கள்

1. மக்கள் தொகை பெருக்கம் 2. நிலத்தை சார்ந்து இருப்போரின் எண்ணிக்கை அதிகம் 3. போதுமான தொழில் வளர்ச்சி இன்மை 4. வேலை இல்லா திண்டாட்டம் 5. அமைப்புமுறை சுரண்டல் 6. திட்டத்தின் நன்மை சிலருக்கு 7. பணவீக்கம்

வறுமை ஒழிப்புத் திட்டங்கள்

நமது நாட்டில் ஐந்தாண்டு திட்டங்களை தொடங்கிய காலத்திலிருந்தே வறுமையை ஒழிப்பதில் தனி கவனம் செலுத்தி வருகின்றோம் இரண்டாம் திட்ட காலத்தில் சமுதாயத்தின் கீழ் நிலையில் உள்ளவர்களை மேம்படுத்த பொதுவாக முயன்றனர் நான்காம் திட்டத்தில் தேசிய குறைந்த அளவு நிலையை அடையும் வகையில் குறைந்த வருவாயுள்ள அவர்களின் நிலையை மேம்படுத்தவும் சிறிய விவசாயிகளை முன்னேற்றமும் சிறப்பு திட்டங்களை வகுத்தனர் ஐந்தாம் திட்டத்தில் வறுமை ஒழிப்பு மையக் கொள்கை ஆயிற்று ஆறு ஏழு எட்டாம் திட்டங்களில் வறுமையை ஒழிக்க ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு வருவாய் பெருக்கம் திட்டங்களை செயல்படுத்தினார் அவற்றில் முக்கியமான திட்டங்களை கூறலாம்.

*ஒருங்கிணைந்த கிராம முன்னேற்ற திட்டம்.

*தேசிய கிராம வேலைவாய்ப்பு திட்டம்.

*கிராம நில மற்றவருக்கு வேலைவாய்ப்பு உறுதி திட்டம்.

*சுய வேலைவாய்ப்புக்கான கிராம இளைஞர்களுக்கு உரிய பயிற்சி திட்டம்.

. *வறட்சியால் பாதிக்கப்படும் பகுதி திட்டம்.

*ஜவகர் வேலைவாய்ப்பு திட்டம்.

அரசு பல்வேறு வகையான வேலைவாய்ப்பு திட்டங்களை செயல்படுத்துவதிலும் வறுமையை முற்றிலும் ஒழிக்க முடிய வில்லை மாறாக ஓரளவு குறைக்க முடிகிறது அரசும் மக்களும் இணைந்து விரைந்து செயல்பட்டால் ஓரளவு நமது முயற்சியில் வெற்றி பெறலாம்.

UNIT-III

## 1. வேளாண்மை உற்பத்தி திறன்

### I.உற்பத்தி திறன் விளக்கம்

வேளாண்மையின் மொத்த உற்பத்தி விவசாயிகளின் உற்பத்தி திறனை சார்ந்திருக்கிறது நல்ல வளமான நிலமும் தேவையான உற்பத்தி காரணிகள் இருந்தாலும் நிலத்தை நிர்வகிக்கின்றவர்களும் நிலத்தில் பாடுபடுகின்ற அவர்களும் ஆற்றல் குறைந்தவர்களாக இருந்தால் மொத்த உற்பத்தி கூடாது

இருவகை உற்பத்தித்திறன்: வேளாண்மை உற்பத்தி திறனை 1. நிலத்தின் உற்பத்தித் திறன் என்றும் 2. உழைப்பின் உற்பத்தித்திறன் என்றும் இரு வகையாகப் பிரிக்கலாம்

1. நிலத்தின் உற்பத்தித் திறன்:இதனை ஓர் ஏக்கர் உற்பத்தித்திறன் என்றும் கூறுவார்கள் அதாவது மொத்த விளைச்சலை நிலப்பரப்பின் அளவை வகுத்து ஒரு ஏக்கரில் விளைச்சலில் எவ்வளவு என்று கணக்கிடுகின்றனர் ஒரு ஏக்கர் உற்பத்தியை கூட்டினால் மொத்த உற்பத்தி கூடும் வேளாண்மையில் நிலம் அளவு கிடைப்பதால் பண்ணையின் அளவை விரிவாக்கிக் கொண்டு செல்வதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு.இந்நிலையில் நிலத்தில் ஒரு ஏக்கர் உற்பத்தி மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது சரி இந்த முறை சாகுபடி ஒரு ஏக்கர் இன் உற்பத்தியை உயர்த்த துணை செய்கின்றது

2. உழைப்பின் உற்பத்தித் திறன்:நிலத்தில் உழைக்கின்ற அவர்களின் உற்பத்தித்திறனை இருவகைகளில் அறியலாம் முதலாவதாக உழைப்பாளர்களின் சராசரி உற்பத்தியை கணக்கிட்டு உற்பத்தித் திறனை அறியலாம் இரண்டாவதாக இறுதிநிலை உழைப்பாளியின் ஆக்கத்திறனை கொண்டு அறியலாம் நமது நாட்டில் வேளாண்மையில் தேவைக்கு மேல் மிகுதியாக உழைப்பாளிகள் ஈடுபட்டிருப்பதால் இறுதிநிலை ஆக்கத்திறன் சைவராக இருக்கின்றது உழைப்பாளர் ஆக்கத்திறன் அவரது திறமை கல்வி அறிவு தொழில் நுட்ப அறிவு கிடைக்கும் கூலி வேலை செய்யும் சூழ்நிலை என்று பலவற்றை சார்ந்து அமைகின்றது.

தேவை: வேளாண்மையின் உற்பத்தி திறனை கூட்ட வேண்டியதற்கான காரணங்களை கூறலாம்

1.மக்கள்தொகை விரைந்து வளர்கின்றது இதனால் உணவு தேவை கூடுகின்றது மொத்த சாகுபடி நிலத்தை கூட்டி முடியாத நிலையில் உற்பத்தி திறனை கூட்டினால் தான் உணவு உற்பத்தியைக் கூட்ட முடியும்

2. நாட்டை தொழில்மயமாக்கல் முயல்கின்ற பொழுது தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருட்களின் தேவையும் தொழில்களில் வேலை செய்கின்ற அவர்களின் உணவுத் தேவையும் கூடுகின்றது இவற்றை அதிக அளவில் அளிக்க வேளாண்மை உற்பத்தி திறனை கூட்ட வேண்டும்

3. வேளாண்மையில்ஈடுபட்டு இருக்கின்றவர்கள் இன் வருவாயையும் வாழ்க்கை தரத்தையும் உயர்த்த வேளாண்மை உற்பத்தியை கூட்ட வேண்டும்

4.வேளாண்மை உற்பத்தி ஏற்ற அளவில் அமைந்தால் மட்டும்தான் கிராமப்புறங்களில் சேமிப்பை கூட்டி மூலதனத்தை வளர்க்கமுடியும்

5. உழைப்பாளர் இன் உற்பத்தி ஆற்றலை கூட்டுகின்றது வேளாண்மையில் இப்பொழுது இருக்கின்ற அளவிற்கு உழைப்பாளர்கள் தேவைப்பட மாட்டார்கள் எச்ச உழைப்பை தொழில்களுக்கு மாற்றலாம்

## வேளாண்மையில் உற்பத்தி திறன் குறைவாக இருப்பதற்கான காரணங்கள்

நமது நாட்டில் வேளாண்மை உற்பத்தி திறன் இடத்திற்கு இடம் வேறுபடுகிறது மொத்தத்தில் வேறு பல வளர்ச்சி பெற்ற நாடுகளோடு ஒப்பிடும் பொழுது இங்குள்ள உற்பத்தி திறன் மிகவும் குறைவாக இருக்கின்றது டாக்டர் சௌஹான் நிலத்தின் உற்பத்தி குறைந்து வரும் போக்கினை வரப்போகின்ற ஆபத்துக்களில் அறிகுறியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறி எச்சரிக்கின்றார் உற்பத்தி திறன் குறைவாக இருப்பதற்கான காரணங்களை சுட்டிக்காட்டலாம்

1. மிகுதியான மக்கள் வேளாண்மையை சார்ந்திருத்தல்
2. காடுகளை அழித்தல்
3. குறைவான முதலீடு
4. பழைய உற்பத்திக் கருவிகளும் முறைகளும்
5. பருவமழையின் சூதாட்டம்
6. நீர்த்தேக்க மண்ணரிப்பு சிக்கல்
7. பண்ணை உரத்தின் அளிப்பு குறைதல்
8. நில சீர்திருத்த நடவடிக்கைகள்
9. புதிய சாகுபடி முறைகளை பின்பற்றுவதில் தயக்கம்
10. கட்டிடப் பணிகள்
11. கல்வியறிவின்மை
12. மிக சிறிய பண்ணைகள்
13. நிலவுடைமை அமைப்பு
14. போதுமான நிதி வசதி இன்மை

15. சரியான ஆராய்ச்சிகள் இன்மை
16. தூண்டுதலின்மை
17. சரியான அமைப்புமுறை இன்மை

## தொழில்நுட்ப தொடர்புகள்

தொழில்நுட்ப தொடர்புகளுக்கும் வேளாண்மை உற்பத்தி திறனுக்கும் நேரடி தொடர்பு இருக்கின்றது வேளாண்மையில் பின்பற்றக்கூடிய தொழில்நுட்ப முறையை உழைப்பு செறிவு முறை என்றும் மூலதனச் அறிவு முறை என்றும் இரு வகைகளாகப் பகுக்கலாம்.

1. உழைப்பு செறிவு முறை:இம்முறையில் வேளாண்மை பணிகளுக்கு மிகுதியாக உழைப்பை பயன்படுத்துவார்கள் மிகவும் குறைந்த அளவிலேயே கருவிகளையும் எந்திரங்களையும் பயன்படுத்த காணலாம் சிறிய பண்ணைகளுக்கு உழைப்பு செறிவு முறையே சிறந்ததாக இருக்கின்றது

2. மூலதன செறிவு முறை: இதில் உற்பத்திக் கருவிகளின் ஆதிக்கம் மிகுதியாக இருக்கும் அதாவது வேளாண்மை எந்திர மயமாக்கப்பட்டு இருக்கும் அமெரிக்கா போன்ற நாடுகளில் சாகுபடிக்கு ஏராளமாக நிலம் கிடைக்கின்றது ஆனால் அங்கு உழைப்பும் பற்றாக்குறையாக இருக்கின்றது இந்நிலையில் விரிவான சாகுபடிக்கு மூலதன சரிவு முறையே ஏற்றதாக உள்ளது பெரிய பண்ணைகளில் மூலதன செறிவு முறைக்கு வாய்ப்பு அதிகம்

ஏற்ற முறை:. ஒரு நாடு உழைப்பு சரிவு முறையை பின்பற்றுவதால் அல்லது மூலதன சரிவும் முறையை பின்பற்றுவதால் என்பதை தீர்மானிக்க கீழ்கண்டவற்றை கவனிக்கவேண்டும் 1.சாகுபடிக்கு எவ்வளவு நிலம் கிடைக்கின்றது உழைப்பவர்கள் எவ்வளவு பேர் உள்ள மூலதனம் எவ்வளவு என்பதை பார்க்க வேண்டும் பற்றாக்குறையுள்ள சாதனத்தை குறைவாகவும் மிகுதியாக கிடைப்பவற்றை அதிகமாகும் பயன்படுத்த வேண்டும் 2. சாகுபடி செய்கின்ற பயிர்யின் இயல்பை ஒட்டியும் உற்பத்தி முறை அமையும் 3 பண்ணையின் அளவை கவனிக்க வேண்டும் 4அறிவியல் முன்னேற்றத்திற்கும் பின்பற்றும் முறைக்கும் தொடர்பு இருக்கின்றது 5. இரண்டு முறைகளையும் ஒரு நாட்டின் பின்பற்றலாம் ஒன்றுக்கு ஒன்று துணையாக அமையும்.

## செறிவு முறை வேளாண்மை மாவட்ட திட்டம்

நமது நாட்டில் வேளாண்மை முன்னேற்றத்திற்காக தீட்டி செயல்படுத்திய வளர்ச்சித் திட்டங்களில் குறிப்பிடத்தக்கது செறிவு முறை வேளாண்மை மாவட்ட திட்டமாகும் இதனை ஒரு கட்டுக்கோப்பான திட்டமாக 1959ல் தீட்டி 1960-61 செயல்படுத்த தொடங்கினர்

நோக்கங்கள்: செரிந்த முறை வேளாண்மை மாவட்ட திட்டத்தின் நோக்கங்களைக் கூறலாம் : 1. வேளாண்மை உற்பத்தி சிக்கல்களுக்கு ஒருங்கிணைந்த செறிவான முறையில் தீர்வு கண்டு அவற்றை எந்த பகுதிகளில் பலன் கிடைக்கும் வாய்ப்புகள் இருக்கின்றது அந்தப் பகுதிகளில் பின்பற்றுவது அடிப்படை நோக்கமாகும். 2. தீவிரமாக நிதி தொழில்நுட்ப உதவிகளை அளித்தும் விரிவாக்கம் முறைகளை பின்பற்றி நீர்வாகத்தை முடுக்கியும் வேளாண்மை உற்பத்தியில் உயர்ந்த நிலையை அடைவது உடனடி நோக்கமாக இருந்தது. 3. ஊதுபத்தி திறனில் தானே மேலெழு நிலையை உருவாக்கும் உள்ளார்ந்த சக்திகளை செயல்பட செய்வது நீண்டகால நோக்கமாக இருக்கும். 4. உற்பத்தியை கூட்டுவதற்காக சிறந்த முறைகளை உருவாக்கி அப்படிப்பட்ட தீவிர வேளாண்மை உற்பத்தி முறைகளை மற்ற பகுதிகளிலும் பரப்புவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

செயல்முறை: இத்திட்டத்தை முதலில் 7 மாநிலங்களில் செயல்படுத்தினர் இவற்றில் ஆந்திரா பீகார் தமிழ்நாடு மத்திய பிரதேசம் ஆகிய நான்கும் நெல் பயிரிடும் மாநிலங்கள் பஞ்சாப்பும் உத்திரப்பிரதேசமும் கோதுமை உற்பத்தி செய்பவை ராஜஸ்தான் திணை வகைகளை உற்பத்தி செய்யும் மாநிலம் செயல்படுத்தும் மாவட்டத்துக்கு கீழ்க்கண்ட தகுதிகளில் அடிப்படையில் தெரிந்தெடுத்தனர்.

1 போதுமான அளவு நீர்ப்பாசன வசதி இருக்க வேண்டும். 2 வெள்ளம் கழிவுநீர் மண்ணரிப்பு போன்ற இயற்கை இடர்பாடுகள் குறைவாக இருக்க வேண்டும் 3. கூட்டுறவு சங்கங்கள் பஞ்சாயத்துகள் போன்ற கிராம நிறுவனங்கள் நன்கு வளர்ச்சி பெற்ற நிலையில் இருக்க வேண்டும் 4குறுகிய காலத்தில் வேளாண்மை உற்பத்தியை பெருக்க வாய்ப்புகள் மிகுதியாக இருக்க வேண்டும் 5 சிறந்த நிர்வாகத்திற்கும் மேற்பார்வை வைக்கும் ஏற்ற அடக்கமான மாவட்டமாக இருக்க வேண்டும் 1962 முதல் 63 1963 முதல் அறுபத்தி நான்காம் ஆண்டுகளில் மேலும் 8 மாவட்டங்களில் இத்திட்டத்தை விரிவுபடுத்த இதனால் மொத்தத்தில் 16 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்பட்டது

இத்திட்டத்தின் செயல்முறை குறிக்கோளாக: 1. புதிய தொழில்நுட்ப முறையை பின்பற்றி நிலத்தில் உற்பத்தியாற்றலில் புரட்சிகர முன்னேற்றத்தை பெற ஏற்ற வழிமுறையை கண்டுபிடித்தல் பரப்புதல். 2. திருந்திய உற்பத்தி முறைகளை கையாளும் வகையில் விவசாயிகளின் கண்ணோட்டத்தை மாற்றக்கூடிய இனங்காணுதல். 3. நாட்டில் நடைபெறும் ஆராய்ச்சிகளில் துணையோடு வேளாண்மை இல் பின்பற்ற வேண்டிய கட்டுக்கோப்பான முறைகளை உருவாக்குதல். 4. ஒருங்கிணைந்த முறையில் திறமையாக வேளாண்மை முன்னேற்ற திட்டங்களை செயல்படுத்தக் கூடிய மாவட்ட நிலை நிர்வாக அமைப்பு முறையை உருவாக்குதல் ஆகியவை இருந்தன.

செயல்திட்டம்: இதில் இரு வகையான செயல் திட்டங்கள் இடம் பெற்றன. 1. முதலாவது வேளாண்மை பண்ணையிலேயே மேற்கொள்ளக்கூடிய

நடவடிக்கைகளை நடைமுறை செயல்திட்டங்கள் புதிய முறைகளை அறிமுகப்படுத்தி பயிர் அறுவடை மதிப்பீடுகள் தண்ணீரை பயன்படுத்துதல் நிர்வாக ஆகியவை இவற்றில் அடங்கும் .2. இரண்டாவதாக பண்ணைக்கு வெளியில் செய்கின்ற பணிகள் இவற்றில்இடு மானங்கள் தேவையான அளவில் கிடைக்க ஏற்பாடு செய்தல் நிதி அளித்தல் எச்ச உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய வகை செய்தல் போக்குவரத்து பண்ணை திட்டமிடல் மண்ணைச் சோதனை செய்யும் பரிசோதனை கூடங்களை அமைத்தல் கிராம நிறுவனங்களை வலுப்படுத்துதல் விவசாயிகளுக்கு கல்வி பயிற்சி அளித்தல் ஆகியவை இடம்பெற்றன.

**இத்திட்டத்தின் சிறப்புகள்:**

1. இத்திட்டம் வேளாண்மையை புத்தாக்கம் செய்யக்கூடிய புதிய முறையை செயல்படுத்திக் காட்டியது
2. விவசாயி தயக்கத்தை உதறிவிட்டு புதிய முறையை பின்பற்ற வருவார் என்பதை உணர்த்த முடிந்தது
3. புதிய முறைகளைப் பின்பற்றுவது பெரிய விவசாயிகளை போன்றே சிறிய விவசாயிகளும் முற்போக்கு இருப்பார்கள் என்பது தெரிந்தது
4. இருக்கின்ற நிர்வாக அமைப்பு முறை போதுமானதாக இல்லை என்பதும் புதிய திட்டங்களை செயல்படுத்தும் வகையில் நிர்வாகத்தை மாற்றியமைக்க வேண்டியது தேவை என்பதும் புரிந்தது
5. வேளாண்மை கடன் விற்பனை விலை முதலீடு நிலம் ஆகியவை பற்றிய அரசின் கொள்கைகளில் மாற்றம் தேவை என்பது உறுதியானது
6. கிராமங்களின் சிந்தனையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் வெளிப்பட்டது

## செறிவு முறை வேளாண்மை வட்டாரக் திட்டம்

***(INTENSIVE AGRICULTURAL AREA PROGRAMME)***

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைக்கால மதிப்பீட்டு குழு வேளாண்மை உற்பத்தியை உயர்த்த வாய்ப்புள்ள இடங்களில் அறிவியல் முற்போக்கு வேளாண்மை முறைகளை வளர்க்க தீவிரமான முறையில் முயல வேண்டும் என கூறியது அதிக உணவு உற்பத்தியின் தேவையும் சரிவு முறை வேளாண்மை மாவட்ட திட்டத்தில் கிடைத்திருந்த வெற்றியும் உணவு வேளாண்மை அமைச்சகத்தை செறிவு முறை வேளாண்மை வட்டார திட்டத்தை தீட்டி செயல்படுத்த தூண்டின

இத்திட்டத்தை கோதுமை ,நெல் ,திணைகள் ,பருத்தி ,கரும்பு ,உருளைக்கிழங்கு ,பருப்பு வகைகள் ஆகிய முக்கிய பயிர்களை தீவிரமாக பெருக்கும் நோக்கில் 1964-65 இல் 114 தெரிந்தெடுத்த மாவட்டங்களில் செயல்படுத்தினர் இந்த

மாவட்டங்களில் 910 வட்டாரங்களில் 133 லட்சம் எக்டேர் நிலம் பயனடைந்தது 1965-66 இல் 30 லட்சம் குடும்பங்கள் பயன் அடைந்தன.

## புதிய வேளாண்மை தொழில்நுட்ப முறை

***(NEW AGRICULTURAL STRATEGY)***

1966-67 இல் இந்திய அரசு வேளாண்மையில் புரட்சியை ஏற்படுத்தி திறனைக் கூட்டும் நோக்கத்தில் அறிவியலையும் தொழில்நுட்பத்தையும் பின்பற்ற புதிய செயல் திட்டத்தை உருவாக்கி பின்பற்றியது இதனை புதிய வேளாண்மை தொழில்நுட்பம் முறை என்றும் பசுமை புரட்சி என்றும் குறிப்பிட்டனர் இதனை முந்திய வேளாண்மை வளர்ச்சி செயல் திட்டங்களில் பட்டறிவின் அடிப்படையில் உருவாக்கினர்

பசுமைப் புரட்சிக்கு முன்னோடியாக அமைந்தது தீவிர வேளாண்மை மாவட்ட திட்டம் ஆகும் இதனை 1960 61 இல் 7 மாவட்டங்களில் முன்னோடி திட்டங்களாக நடத்தினர் இதற்கு போர்டு நிறுவனம் நிதி உதவி அளித்தது இந்த திட்டத்தை இரண்டு முக்கிய நோக்கங்களுக்காக ஐந்தாண்டுகள் செயல்படுத்த தீர்மானித்தனர் முதலாவதாக இருக்கின்ற உணவு பற்றாக்குறையை தீர்க்க விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படை அமைக்கவும் உணவு உற்பத்தியை குறிப்பிட்ட அளவில் பெருக்கவும் வேண்டும் இரண்டாவதாக எப்படி உற்பத்தி சாதனங்களை தீவிரமாக பயன்படுத்தி விளைச்சலை கூட்டும் முறைகளை கண்டு பரப்ப வேண்டும்

இதற்காக பின்பற்றிய புதிய செயலாக்க முறையில் கீழ்க்கண்ட செயல்திட்டங்கள் அடங்கின

1.மிகுதியான விளைச்சலைத் தருகின்ற தெரிந்தெடுத்த புதிய விதைகளை பயன்படுத்துவது

2. ரசாயன உரங்களை தக்க அளவில் போடுவது

3. நல்ல மழை வளம் உள்ள இடங்களிலும் நீர்ப்பாசன வசதிகள் உள்ள இடங்களிலும் தீவிர சாகுபடி முறையை கொண்டு வருவது.

4. நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி பூமியின் மேல்மட்டத்தில் உள்ள தண்ணீரை எல்லாம் பயன்படுத்துவது.

5. உள்நாட்டு உறவு உற்பத்தியை பெருக்கி மிகுந்த அளவில் பயிர்களுக்கு உரமிடுவது

புதிய திட்டத்தில் கிடைத்த வெற்றிகள் 7 மாவட்டங்களில் செயல்படுத்திய இத்திட்டத்தை நாட்டின் பிற பகுதிகளிலும் விரிவுபடுத்தி விளைச்சலை பெருக்க தீர்மானித்தனர்

பசுமை புரட்சி:. 1967-68 8.1 4 மில்லியன் ஏக்கரில் புதிதாக மிகுந்த விளைச்சல் தரும் விதைகளைப் பயன்படுத்தினர் இதனால் உணவு தானிய விளைச்சல் 7.7 3 மில்லியன் டன் கூடியது நான்காம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி மிகுந்த விளைச்சல் தரும் வகைகளை பயிர் செய்வதன் மூலமாக பசுமை புரட்சியை நமது நாட்டில் தோன்ற செய்ய

திட்டமிட்டுள்ளனர் திட்டக்குழுவின் மதிப்பீட்டின்படி மிகுந்த விளைச்சல் தரும் வகைகளை பயிரிடும் திட்டம் மூலம் உற்பத்தி மிகவும் பெருகும் என்று எதிர்பார்த்தனர்.

சாதனை: மிகுந்த விளைச்சல் தரும் பயிர்களை சாகுபடி செய்ததால் உணவு தானிய உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது இதனாலேயே நடைபெறுகின்ற மாற்றத்தை பசுமைப் புரட்சி என்று விவரிக்கின்றனர் 1669 போருக்கு விதைகளை பயன்படுத்திய நிலத்தின் அளவு 112 மில்லியன் ஏக்கரில் இருந்து 34.5 மில்லியனாக உயர்ந்தது 1964 65 கோதுமை உற்பத்தி 12.3 மில்லியன் டன்னாக இருந்தது 1967-68 16.6 மில்லியன் டன்னாக உயர்ந்தது அரிசி உற்பத்தியில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை 1661 34.1 இரண்டு மில்லியன் டன்னாக இருந்த அரிசி உற்பத்தி 1967-68 37.8 6 மில்லியன் டன்னாக கூடியது .

உரமிடுதல்:. புதிய வேளாண்மை விளைச்சல் பெருக திட்டத்தில் உரமிடுவது சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது முதல் மிகுதியாக உரத்தை பயன்படுத்துகின்றனர்1990-91இல் 12.5 மில்லியன் டன்னாக இருந்த மொத்த உறவு உற்பத்தி 1998 99 16.8 மில்லியன் டன்னாக கூடியது.

நீர்ப்பாசனம்:1965-66,1966-67 ஆகிய ஆண்டுகளில் மழையின் காரணமாக பஞ்சம் தோன்றியது பயிர்கள் பாதிக்கப்பட்டன இதனால் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதில் கவனம் செலுத்தினர் குறிப்பாக சிறிய நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தினர் இதனால் 10 மில்லியன் ஏக்கர் நிலம் புதிதாக நீர்ப்பாசன வசதிகளை பெற்றது.

வேளாண்மை கடன்: சாகுபடி முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்த பணம் தேவைப்படுகிறது நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கவும் சரியான உரங்களைப் பயன்படுத்தவும் சிறந்த கவிதைகளை தூவவும் மருந்துகளை பெருமளவில் பயன்படுத்தும் ஆற்றல் மிக்க கருவிகளை வாங்கவும் விலை பொருட்களை பாதுகாத்து வைத்திருந்து நல்ல விலைக்கு விற்க விவசாயிகளுக்கு பணம் தேவைப்படுகின்றது அரசு கூட்டுறவின் மூலமாகவும் சமுதாய நலத் திட்டத்தில் வாயிலாகவும் நேரடியாகவும் கடன் தருகின்றது.

எந்திரங்களை பயன்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்படுகின்றது விவசாயிகளுக்கு சில வகை கருவிகளை வாங்குவதற்கு அரசு கடன் தருகின்றது கவிதைகளை பயன்படுத்துவதோடு புதிய சாகுபடி முறைகளை கற்றுத் தரவும் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

காரணங்கள்: மிகுந்த விளைச்சல் தரும் பயிர் வகைகளை சாகுபடி செய்வதற்கு பல வகையான காரணங்கள் உள்ளன உணவு பற்றாக்குறையை தீர்க்க இரண்டாவதாக எதிர்பார்க்கின்ற விலை எட்டிப்பிடிக்க மூன்றாவதாக குறிப்பிட்ட இடங்களில் மிகுதியான விளைச்சல் ஏற்படுகின்றபோது மற்ற விவசாயிகளும் இதை

பயன்படுத்த நான்காவதாக வேளாண்மை உற்பத்தி பெருக்கம் மொத்த பொருளாதாரத்தில் சில சிறந்த விளைவுகளை ஏற்படுத்தும் உணவில் தன்னிறைவு பெற்றால் உணவு தானிய இறக்குமதியை குறைக்கலாம் ஐந்தாவது இத்திட்டம் நல்ல நீர் வளமும் நிலவளமும் உள்ள இடங்களிலேயே முதலில் பூத்த பெறுகின்றது அதனால் உற்பத்தி பாதிக்கப் படாது உற்பத்தியில் ஏற்றத்தாழ்வு ஏற்படாது.

மதிப்பீடு:பசுமைப் புரட்சியின் விளைவாக புதிய நிலம் சாகுபடியின் கீழ் வந்தாலும் நீர்ப்பாசன வசதிகள் பெருகியதால் விளைச்சல் கூடியுள்ளது ஆனால் இத்திட்டத்தின் செயல்முறையில் சில குறைகள் இருப்பது சுட்டிக்காட்டப்படுகின்றது உரம் விதைகள் கருவிகள் மருந்துகள் போன்றவற்றிற்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது இரண்டாவதாக சாகுபடி முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் விதைகள் உரங்கள் கருவிகள் ஆகியவற்றை மிகுதியாக பயன்படுத்துவதால் மூலதனம் அதிகமாக தேவைப்படுகிறது நூலறிவு சாகுபடி முறைகள் சிறிய விவசாயிகளுக்கு மூன்றாவதாக பசுமைப் புரட்சிக்கு முன்னோடியாக நிலச்சீர்திருத்தம் அமையவேண்டும் நிலச் சீர்திருத்தத்தை செய்யாதவரை சாகுபடி செய்கின்றவர்களுக்கு விளைச்சலை கூட்ட வேண்டும் என்ற ஈடுபாடு நான்காவது தெரிந்தெடுத்த பகுதிகளில் மட்டும் மிகுந்த விளைச்சல் தரும்நான்காவது தெரிந்தெடுத்த பகுதிகளில் மட்டும் மிகுந்த விளைச்சல் தரும் பயிர்களை சாகுபடி செய்வதால் ஏற்றத்தாழ்வு ஐந்தாவதாக பஞ்சாப் போன்ற சில மாநிலங்களில் கோதுமை போன்ற பொருட்கள்ஐந்தாவதாக பஞ்சாப் போன்ற சில மாநிலங்களில் கோதுமை போன்ற பொருட்கள் மிகுதியாக விளைந்தன இவற்றின் விலைகள் வீழ்கின்றன விளைபொருட்களை நல்ல விலைக்கு விற்க வேண்டுமானால் வைத்திருக்க வேண்டும் இதற்கான கிடங்கு வசதிகள் இல்லாமையே நாடு ஆறாவதாக பல உணவு தானியங்களில் எதிர்பார்த்த அளவில் விளைச்சல் உயரவில்லைஆறாவதாக பல உணவு தானியங்களில் எதிர்பார்த்த அளவில் விலை உயரவில்லை.

## வேளாண்மையை எந்திர மயமாக்குதல்

இந்திய வேளாண்மையில் உற்பத்தியை உயர்த்த வேண்டிய தேவை ஏற்பட்டது உற்பத்தித் திறனுக்கும் பயன்படுத்துகின்ற கருவிகளுக்கு நெருங்கிய தொடர்பு உள்ளது ஆதலால் நமது உழவர்கள் தற்பொழுது பயன்படுத்துகின்ற கருவிகளைப் பற்றியும் அவற்றில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் பற்றியும் ஆராய வேண்டியது தேவையாகின்றது இந்திய உள்ளவர்கள் மிகவும் பழமையான கருவிகளை பயன்படுத்துகின்றார்கள் இவை திறமையோடு உற்பத்தி செய்ய எந்த வகையிலும் ஏற்றவை அல்ல மற்றைய நாடுகளில் பயன்படுத்துகின்ற கருவிகளோடு ஒப்பிட்டால் நமது கருவிகள் மிகவும் பிற்போக்கான வை ஆகையால் உழவர்களின் உற்பத்தி திறனை உயர்த்த புதிய வேளாண்மை கருவிகளை பயன்படுத்த வேண்டும் என்பதை பொருளியல் அறிஞர்கள் வற்புறுத்துகிறார்கள்

விளக்கம்:. எந்த அளவு கருவிகளையும் எந்திரங்களின் பயன்படுத்துவது என்பதில் கருத்து மாறுபாடுகள் காணப்பெறுகின்றது ஒரு பிரிவினர் இந்திய வேளாண்மை எந்திரமாக வேண்டிய அவசியத்தை வற்புறுத்துகின்றனர் மற்றொரு பிரிவினர் எந்திரம் மக்கள் நடைமுறை சாத்தியமில்லை என்று கூறுகின்றனர்.

இயந்திர மயமாக்கல் நடைமுறை சாத்தியமில்லை என்று கூறுகின்றார்கள் கீழ்கண்ட காரணங்களை கூறுகின்றார்கள்.

முதலாவதாக நமது நாட்டில் பெரிய விவசாய பண்ணைகள் இல்லை இருக்கின்ற நிலம் துண்டாடப்பட்டு கூறு போடப்பட்டு சிறிய சிறிய துண்டுகளாக இருக்கின்றது பெரிய பண்ணையாக இருந்தால் எந்திரங்களை பயன்படுத்துவது சாத்தியமாகும் எந்திரமாக பெற்ற நாடுகளை கவனித்தால் இந்த உண்மை விளங்கும்.

இரண்டாவதாக நமது நாட்டில் இப்பொழுது வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கின்றது வேளாண்மையில் ஈடுபட்டவர்களுக்கு ஆண்டில் பாதி நாட்கள்தான் வேலை இருக்கின்றது இந்தநிலையில் எந்திரங்களை பயன்படுத்தினால் வேலை இல்லா திண்டாட்டம் மிகுதியாகும்.

மூன்றாவதாக எந்திர மயமாக்கலின் மூலமாக உற்பத்தி திட்டவட்டமாக கூடும் என்று கூற முடியாது.

நான்காவதாக இந்தியாவில் கால்நடைகள் ஏராளமாக இருக்கின்றன ஆனால் அவற்றை பயன்படுத்த முடியாமல் போகலாம்.

ஐந்தாவதாக எந்திர மயமாக்க அதிக மூலதனம் தேவை நமது நாட்டு விவசாயிகளிடம் எந்திரங்களில் முதலீடு செய்கின்ற அளவிற்கு பணம் இல்லை.

ஆறாவதாக எந்திரங்களையும் அவற்றிற்கு வேண்டிய கருவிகளையும் உற்பத்தி செய்யும் நிலையில் நாம் இல்லை.

ஏழாவதாக அதிக கல்வியறிவு இல்லாத கிராம மக்களால் எந்திரங்களின் அமைப்பை புரிந்துகொண்டு இயக்க முடியுமா என்பது சந்தேகம்.

மேற்கண்ட காரணங்களை காட்டி இந்திய வேளாண்மையை எந்திரம் மயமாக்குதல் சாத்தியமில்லை என்று வாதிடுகிறார்கள்

இயலும்: ஆனால் வேளாண்மை எந்திர மயமாக்கலின் மூலமாக தான் உற்பத்தியை பெருக்க முடியும் என்பவர்கள் சில காரணங்களை கூறுகின்றனர்.

நீண்டகாலத்தில் இந்தியாவில் வாழ்க்கைத்தரம் உயர வேளாண்மை விரைந்த வளர்ச்சி பெற வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கின்றோம் இதற்காக கூட்டுறவு பண்ணை முறையை நமது லட்சிய வழிமுறையாக ஏற்றுக் கொண்டுள்ளோம் நாடெங்கும் பெரும் பண்ணைகள் தோன்ற சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன இதனால் எதிர்காலத்தில் தேவையான ஒன்றாக இருக்கும்.

நிலத்தின் அளவு குறைவாக இருப்பது எந்திரம் மயமாக்கலுக்கு ஒரு தடையாக இருக்காது சிறியவர்களும் பேரு எந்திரங்களும் உள்ளன எந்திரமாக வேண்டுபவர்கள் இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகும் என்பதை மறுக்கின்றனர் எந்திரம் அதன் மூலம் புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படும்.

எந்திர மயமாதல் உற்பத்தி திறன் குறையாது என்பதை ரஷ்யாவின் சாதனை காட்டுகின்றது அங்கு நல்ல விளைச்சல் இருக்கின்றது இதிலிருந்து எந்திரமாக உற்பத்தியை பெருக்கும் என்பது தெரிகின்றது

நமது நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை உருவாக்காமல் எந்திரமாக முயலவேண்டும் நாடு முழுவதையும் எந்திரமாய் மாற்றுதல் என்பது இயலாத காரியம் ஆனால் எங்கெல்லாம் வாய்ப்புகள் உண்டு அங்கெல்லாம் எந்திரமாக தக்க நடவடிக்கைகள் எடுக்கலாம்.

## 2. நிலவுடமை முறைகளும் நில சீர்திருத்தங்களும்

. நிலவுடைமைச் சிக்கல்

இந்திய வேளாண்மையில் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருப்பது நிலவுடைமைச் சிக்கலாகும் அடிப்படையாக அமைகின்றது நமது நாட்டு மக்களுக்கு நிலத்தின் மீது இருக்கும் பற்று மிகவும் ஆழமாக வேரூன்றியுள்ளது நிலம்வருவாய் தருகின்றது என்றும் மதிப்புடைய சொத்து என்ற முறையில் வேளாண்மையில் நேரடியாக ஈடுபட அவர்களும் நிலத்தை வைத்துக் கொள்ள விரும்புகின்றனர்.

நிலவுடைமையாளர்கள் ஐ பொதுவாக மூன்று வகைகளாக பிரிக்கலாம் முதலாவதாக தங்களது நிலத்தை நேரடியாக சாகுபடி செய்யாமல் நிலத்தை குத்தகைக்கு கொடுத்து விடுபவர்கள் இரண்டாவது வகை நிலத்தை தாங்களே நேரடியாக மேற் பார்த்து விவசாயக் கூலிகளை கொண்டு சாகுபடி செய்பவர்கள் இவர்கள் நிலத்தில் இறங்கி ஈடுபடமாட்டார்கள் மூன்றாம் வகை நிலத்தில் தாங்களே உழைக்கும் நிலவுடைமையாளர்கள்

நில உடைமையை ஒட்டி நமது நாட்டில் இரு வகையான சிக்கல்கள் எழுந்தன ஒன்று நில வரி வசூலை பொட்டி அரசு ஏற்படுத்திய முறையால் ஏற்பட்ட சிக்கல் ஜமீன்தாரி முறை மகல்வாரி முறை ரயத்துவாரி முறை என்று மூன்று வகைகளில் அரசு வரி வசூல் முறை உருவானது இரண்டாவது சிக்கல் நிலவுடைமையாளர்கள் வேராகவும் நிலத்தில் உழைப்பவர்கள் வேறாகவும் இருப்பதால் எழுகின்ற சிக்கலாகும்.

நில வரி வசூலை ஒட்டிய சிக்கலை ஓரளவு அரசு தீர்த்து விட்டது ஆனால் நிலக்குத்தகை ஒட்டி எழுகின்ற சிக்கல் இப்பொழுதும் தீர்க்கப்படாத இருக்கின்றது நில உடைமைக்கு உச்சவரம்பு நிர்ணயிக்க அரசு நடவடிக்கைகள் எடுக்கின்றது.

ஜமீன்தாரி முறை

நிலவரி வசூலிக்க தோற்றுவிக்கப்பட்ட முறைகளில் வரலாற்று முக்கியத்துவம் பெற்றது ஜமீன்தாரி முறையாகும்.கிழக்கிந்திய நிறுவனத்திடம் இந்தியாவின் ஆட்சி சென்றபோது எளிதாக நில வரி வசூலை பெறும் வழிமுறையாக ஜமீன்தாரி முறையை உருவாக்கினர் கவர்னர் ஜெனரலாக இருந்த காரன் வாலிஸ் பிரபு நிலவரி வசூலித்துக் கொண்டிருந்த ஜமீன்தார்களோடு வரி வசூலிக்க நிலையான ஏற்பாட்டை செய்து கொண்டார் அதன்படி ஜமீன்தார்கள் அவர்களது பகுதிகளுக்கு நிலவுடைமையாளர்கள் ஏற்றுக்கொள்ள பெற்றனர் அவர்கள் தாங்கள் குத்தகையாக பெற்றதில் பதினொன்றில் 10 பங்கு அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையின் அளவு நிர்ணயிக்கப்பட்டது

நன்மைகள்:.

1. அரசுக்கு கிடைக்கின்ற வருவாய் உறுதி செய்யப் பெற்றது
2. நிலவரி வசூலிக்கும் தொல்லையோ அதற்கு வேண்டிய அலுவலர்களை நியமிக்கும் பொறுப்பு செலவு அரசுக்கு இல்லை
3.ஜமீன்தார்களின் நிலவுடைமையாளர்கள் ஆக ஏற்றுக் கொள்வதால் அவர்கள் நிலத்தின் வளத்தை பெருக்கும் ஆக்கப் பணிகளை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது
4. ஜமீன்தார்களின் ஆதரவோடு ஆங்கிலேய ஆட்சியை வலுப்படுத்த வேளாண்மையில் ஈடுபட்டவர்களின் நியமிக்கப் பெற்ற தலைவர்களாக ஜமீன்தார்கள் விளங்குவார்கள் என்று கருதினர்.

ஆனால் நடைமுறையில் ஜமீன்தார்கள் விளைந்த நன்மைகளை விட கேடுகளை மிகுதி ஜமீன்தார்கள் நிலத்தின் வருவாயை பெறுவதில் காட்டிய ஆர்வத்தை நிலத்தை தெறிக்க செய்வதில்

காட்டவில்லை ஜமீன்தார்கள் சர்வாதிகாரப் போக்கில் நடந்து கொண்டனர் கிராம மக்களுக்கு தலைவர்களாக அவர்களால் விளக்க முடியவில்லை ஆங்கில அரசின் கால் வருடிகளாக அவர்கள் மாறினார்கள்

நாடு விடுதலை பெற்றவுடன் பல மாநிலங்களிலும் ஜமீன்தாரி முறையை ஒழிக்க சட்டங்களை இயற்றினார் ஏறத்தாழ ஜமீன்தார்களின் கையிலிருந்த 175 மில்லியன் ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டது இதற்காக அவர்களுக்கு கொடுத்த இழப்பீட்டு தொகை 500 கோடி ரூபாயாகும் ஜமீன்தாரி முறை ஒழிந்த பிறகு விவசாயிகள் நேரடியாக அரசுக்கு வரி செலுத்துகின்றனர்.

ஜமீன்தாரி முறையை ஒழித்தால் சில குறிப்பிடத்தக்க விளைவுகள் ஜமீன்தார்களின் முறைகெட்ட நிர்வாகத்திலிருந்து விவசாயிகளுக்குஜமீன்தார்களின் முறைகேட்டை நிர்வாகத்திலிருந்து விவசாயிகளுக்கு விடுதலை அரசு நேரடியாக வரி வசூலித்தால் நாடு முழுவதிலும் வரிஅரசு நேரடியாக வரி வசூலித்தால் நாடு முழுவதிலும் வரி வசூலில் ஓர் ஒருமைப்பாட்டை கொண்டுவர வரி வசூலில் நெகிழ்வுத்தன்மை ஏற்பட்டது தேவையான பொழுது அரசு சலுகை காட்டியது 4. நில ஒருங்கிணைப்பு நில உச்சவரம்பு போன்ற சீர்திருத்தங்களை அரசினால் கொண்டுவர உழைக்காமல் உண்டு வாழ்ந்த ஜமீன்தார்கள் இனம் இல்லாமல்உழைக்காமல் உண்டு வாழ்ந்த ஜமீன்தார்கள் இனம் இல்லாமல் போனதால் சமநிலை சமுதாயத்தை உருவாக்கும் பணியை அரசு மேற்கொள்ள முடிந்தது.

## மஹல்வாரி முறை

இந்த முறையில் கிராம சமுதாயத்தோடு அரசு ஒப்பந்தம் செய்து கொள்கின்றது அதன்படி நிலவரி செலுத்துகின்ற பொறுப்பு நிலக்கிழார்கள் தனிப்பட்ட பொறுப்பாகவும் கூட்டுப் பொறுப்பாகும் இருக்கின்றது இம்முறை முதலில் ஆக்ராவில் அதிலும் பின்பற்ற பெற்றது பின்னர் பஞ்சாபிலும் இதனை கைக்கொண்டனர் இம்முறையில் தரிசுநிலம் ஊருக்கு சொந்தமாக கருதப் பெறுகின்றது கிராம சமுதாயம் தரிசு நிலத்தை தனிப்பட்ட அவர்களுக்கு குத்தகைக்கு விடலாம் இந்த முறையின் கீழ் உள்ள நிலத்தில் கூட்டுறவு பண்ணையை அமைத்து சாகுபடி மேற் கொள்வது எளிதாக இருக்கும்.

## இரயத்வாரி முறை

இந்த முறையை 1872 இல் சென்னை மாநிலத்தில் சர் தாமஸ் மன்றோ கொண்டு வந்தார் பின்னர் இதனை பம்பாய் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் பின்பற்றினர் இம்முறையில் பதிவு செய்யப்பெற்ற நில உரிமையாளர் நிலக்கிழார் ஆவார் அவர் நேரடியாக அரசுக்கு வரி செலுத்துவதை நிலத்தை குத்தகைக்கு விடவோ ஒத்தி வைக்கவோ விற்கவோ நிலக்கிழார் உரிமை உண்டு நில வரி செலுத்துகின்ற வரை அவரை நிலத்தை விட்டு வெளியேற்ற முடியாது.

இந்த முறையில் நிலக்கிழார்கள் அரசோடு நேரடியாக தொடர்பு கொள்கிறார்கள். ஆதலால் நில வரியில் நெகிழ்வு தன்மைக்கு வழியுண்டு ஆனால் வரி விதிக்கின்ற முறை குறை உடையது என்று கூறப்படுகின்றது அரசின் அலுவலர்கள் நில வளம் நீர் வசதி நில மதிப்பு ஆகியவற்றை கணக்கில் கொண்டு வரியை நிர்ணயிக்கின்றனர் இப்படி நிர்ணயிக்கின்ற வரி சிறிய விவசாயிகளை பெரிதும் பாதிக்கின்றது மேலும் நிலக்கிழார்கள் தங்களது நிலத்தை குத்தகைக்கு விடுகின்ற பொழுது மிகுதியாக குத்தகை பணம் பெறுகின்றனர்.

## நிலச் சீர்திருத்தங்கள்

Land reforms

வேளாண்மை உற்பத்தியை பெருக்கவும் வேளாண்மையில் ஈடுபட்டு உள்ளவர்களின் தொடர்புகளை செம்மைப் படுத்தவும் நிலவுடைமை நெறிப்படுத்தவும் நிலச் சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன நாடு விடுதலை பெற்றவுடன் ஜமீன்தாரி முறையை ஒழித்தது ஒரு பெரிய நிலச்சீர்திருத்தம் ஆகும்.ஆனால் அது நிலச் சீர்திருத்தத்தின் தொடக்கமாக அமைந்ததே தவிர வேளாண்மையில் உள்ள பல்வேறு சிக்கல்களையும் தீர்ப்பதாக இல்லை இப்பொழுது உள்ள நிலத்தை குத்தகைக்கு பெற்று சாகுபடி செய்பவர்களுக்கு பாதுகாப்பு தருவது நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் அளிப்பது பெற்ற நிலத்தை இணைப்பது கூட்டுப் பண்ணைகளை அமைப்பது ஆகியவற்றை ஒட்டி எழுகின்றன.

தற்போதைய நிலவுடைமை முறையின் குறைகள்:

1.அரசுக்கும் உண்மையான நில சாகுபடி அவர்களுக்கும் இடையில் எண்ணற்ற இடைத்தரகர்கள் இருக்கின்றனர்.

2.சாகுபடி நிலத்தில் பெரும்பகுதி குத்தகை முறையில் இருக்கின்றது.

3. எண்ணற்ற சிறு சாகுபடியாளர்களின் குத்தகை காலம் உறுதியாக இல்லை கடன் நில அடமானம் ஆகியவற்றினால் விவசாயிகள் தங்கள் சாகுபடி செய்யும் நிலத்தின் உரிமை தங்கள் கைகளில் இல்லாமல் அல்லல்படுகின்றனர்.

4. குத்தகை வாரம் அதிகமாக இருக்கிறது.

5. சிறிய துண்டாடப்பட்ட நில அமைப்புகளினால் சாகுபடியில் புதிய முறைகளை பின்பற்றவோ கருவிகளை கையாளவோ உரிய வாய்ப்புகள் குறைவாக உள்ளன.

6. நில பகிர்வில் மிகுந்த ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன பெரும்பாலான விவசாயிகள் நிலமே இல்லாமலோ குறைவான நிலத்தை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்துகின்றனர் இதனால் இவர்களுக்கு உழைப்பதில் உற்சாகம் பிறக்க வில்லை.

7. விவசாயிகளுக்கு இன்று சரியான அமைப்பு முறை இல்லை.

நிலச் சீர்திருத்தங்களின் நோக்கங்கள்:

1.அரசுக்கும் புலவர்களுக்கும் இடையில் இருக்கின்ற இடைத்தரகர்கள் முறையை அகற்ற வேண்டும்.

2.உழைப்பவர்களுக்கு அவர்கள் கட்டுப்பாட்டிற்கு உள்ளிருக்கும் நிலவுடைமை உரிமையை வழங்க வேண்டும்.

3. நில உச்ச வரம்பை செயல்படுத்த வேண்டும்.

. 4. நில உரிமை ஆவணங்களை குத்தகைதாரர்கள் வாரதாரர்கள் பங்குதாரர்கள் ஆகியோரின் உரிமைகள் வெளிப்படும் வகையிலும் பாதுகாப்பு கிடைக்கும் வகையிலும் மாற்றியமைக்க வேண்டும்.

5.புதிய வேளாண்மை தொழில் நுட்பங்களை பயன்படுத்தும் வகையில் துண்டு துண்டாக இருக்கின்ற நிலங்களை இணைக்க வேண்டும்.

நிலச் சீர்திருத்தங்கள் இன் மூலம் இன்றைய நிலவுடைமை முறையில் இருக்கும் குறைகளை போக்கி அவர்களுக்கு நிலத்தை சொந்தமாக்கி வேளாண்மை வளர்ச்சிக்கு வேண்டிய அடித்தளத்தை அமைத்து தர விரும்புகின்றோம்.

1. நில குத்தகை சீர்திருத்தச் சட்டங்கள்:. குத்தகைக்கு நிலத்தை சாகுபடி செய்கின்ற முறை நீண்ட காலமாக இருக்கின்றது நிலம் சிலரின் உடமையாக இருக்கின்றது நிலமற்ற விவசாயிகள் எண்ணிக்கையில் மிகுதியாக உள்ளனர் ஆதலால் போட்டிபோட்டுக்கொண்டு குத்தகைக்கு நிலத்தை பெறுகின்றனர் இதனால் குத்தகையை நிர்ணயிப்பதில் நிலக்கிழாரின் கை ஓங்குகிறது

மேலும் பெரும்பாலான வேளைகளில் நில குத்தகை பதிவு செய்யப் பெறுவதில்லை நிலக்கிழார் இன் விருப்பம்போல் குத்தகை மாற்றம் பெறலாம் இதனால் குத்தகைக்கு நில வளத்தை பெருக்கவும் முழுமூச்சாக உற்பத்தியில் ஈடுபடவும் தூண்டுதல் கிடைப்பதில்லை இத்தகைய குறைகளை போக்க ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்திலேயே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

நாடு விடுதலை பெற்ற பிறகு தக்க வகையில் நிலக் குத்தகையைம்நெறிப்படுத்த காங்கிரஸ் அரசு முயன்றது குத்தகையாளர் களுக்கு பாதுகாப்பு கிடைக்கவும் நியாயமான வகையில் வாரத்தை நிர்ணயிக்கவும் பெரிய நிலத்தை சாகுபடியாளர்களுக்கு பிரித்துக் கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கின்றனர்.

விவசாயக் கூலி ஆட்களுக்கு குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயிக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன எடுத்துக்காட்டாக தமிழகத்தில் ராஜாஜி கொண்டுவந்த தஞ்சாவூர் பண்ணையாட்கள் சட்டத்தையும் காமராஜர் நிறைவேற்றிய நியாய குத்தகை சட்டத்தையும் குறிப்பிடலாம்.

ஐந்தாண்டு திட்டங்களின் கீழ் நிலை குத்தகையை மேலும் நெறிப்படுத்த முயன்றனர் நான்காம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் கீழ்க்கண்ட நில குத்தகை சீர்திருத்தங்களை கொண்டு வரப்போவதாக திட்டத்தின் அறிக்கை கூறியது.

1.குத்தகை நிலங்களை திரும்ப பெற முடியாமல் நிலையாக குத்தகை விட செய்வது.

2.விரும்பி குத்தகை யாளர்கள் நிலத்தை திருப்பி கொடுக்கின்ற பொழுது நிலவுடைமையாளர்கள் அவற்றை வேறு யாருக்காவது ஒதுக்க வேண்டும்.

3.பண்ணை களிலேயே வீடுகட்டி வாழும் குத்தகை அவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு வழங்க வேண்டும்.

4.துணை குத்தகை அவர்களுக்கும் குத்தகை பாதுகாப்பு சட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.

5.தவறான முறையில் குத்தகையாளர் களை வெளியேற்றி சென்றவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் நிலச்சீர்திருத்த சட்டத்தை சிறப்பாக செயல்படுத்த தமிழ்நாடு விவசாய நிலங்கள் குத்தகை பதிவு சட்டம் இயற்றப்பட்டுள்ளது இச்சட்டம் இப்போது தஞ்சை திருச்சி மதுரை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது குத்தகைதாரர்கள் தங்கள்

பெயர் மற்றும் விவரங்களை பதிவு செய்வதற்கென அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் .

2. நில உச்சவரம்பு நிர்ணயித்தல்: சிலரின் கையில் மிகுதியாக நிலம் இருக்கின்றது நிலத்தில் உழைக்கின்ற பலர் நிலமற்ற விவசாயக் கூலிகளாக இருக்கின்றார்கள் இது ஒரு சமுதாய ரீதியாக கருதப்படுகின்றது ஒருவர் உச்சமாக எவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாம் என்பதை வரையறை செய்வதன் அவசியத்தை பல பொருளில் அறிஞர்களும் அரசியல் தலைவர்களும் நெடுங்காலமாகவே வலியுறுத்தி வந்துள்ளனர் .

முதலாவது ஐந்தாண்டு திட்ட அறிக்கையில் நில உச்சவரம்பு நிர்ணயித்து அதன் மூலமாக வேளாண்மையை சீர்படுத்த வேண்டும் என்பதை குறிப்பிட்டு இருந்தார்கள் ஆனால் முதல் ஐந்தாண்டு திட்ட காலத்தில் எந்த மாநிலமும் நில உச்சவரம்பு சட்டத்தை நிறைவேற்றவில்லை அத்தகைய சட்டம் கொண்டுவர அரசியல் நிர்ணய சட்டத்தில் சில தடைகள் இருக்கும் என்று கருதினர் அவற்றை நீக்க 1958ல்அரசியல் நிர்ணய சட்ட திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது 1959இல்ஆளும் கட்சியான காங்கிரசின் நாக்பூர் தீர்மானம் தர்மத்தை நிலைநாட்டும் நோக்கத்தில் ஒவ்வொரு மாநிலமும் நில உச்சவரம்பு சட்டத்தை நிறைவேற்றி எச்சமாக உள்ள நிலத்தை நிலமற்ற மக்களுக்கு பஞ்சாயத்துக்களின் மூலமாக பகிர்ந்தளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டது இதனால் இரண்டாம் திட்டத்தின் இறுதிக்குள் 15 மாநிலங்கள் நில உச்சவரம்பு சட்டங்களை நிறைவேற்றினர்.

நில உச்சவரம்பு அளவு மாநிலங்களுக்கு இடையில் வேறுபட்டுள்ளது பஞ்சாப் ஹரியானாவில் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் ராஜஸ்தானில் 22 அசாமில் 50 ஏக்கர் மேற்கு வங்காளத்தில் 25 கேரளாவிலும் தமிழ்நாட்டிலும் 15 ஏக்கர்கள் மாநில அரசுகள் சூழ்நிலைக்கு ஏற்ப உச்சவரம்பை அமைகின்றன தமிழக அரசு உச்ச வரம்பை 10ஸ்டாண்டர்ட் ஏக்கர்கள் ஆக்க எண்ணியது.

நிலவுடமை க்கு உச்சவரம்பு கட்டுவது இன்றியமையாத ஒன்று என்று கருதுகின்ற அவர்கள் கூறுகின்ற காரணங்களை தொகுத்துக் கூறலாம்.

*சமுதாய நீதியை நிலை நாட்ட நில உச்சவரம்பு தேவை.

*விவசாயிகளின் நில பசியை தீர்க்க வேண்டும் எல்லோரும் கொஞ்சமாவது நிலைமை வைத்துக் கொள்ள விரும்புகின்றனர்

*வருவாய் ஏற்றத்தாழ்வை குறைக்க வேண்டுமென்றால் நில உச்சவரம்பு கொண்டு வரவேண்டும்.

*உற்பத்தியைப் பெருக்க இது ஏற்ற வழியாகும் பெரிய அளவில் முதல் இல்லை ஆதலால் சரிவு முறை சாகுபடி மூலமாகத்தான் உற்பத்தியை பெருக்க முடியும் இதற்கு சிறிய பண்ணைகளேதேவை.

*நிலத்தை பயன்படுத்துவதில் சரியான மாற்றங்களை செய்ய நில உச்சவரம்பு வழிவகுக்கும் உச்சவரம்பு சட்டம் துணைசெய்யும்.

நில உச்சவரம்பு சட்டத்தை எதிர்ப்பவர்கள் சில காரணங்களை கூறுகின்றனர்.:

*நில உச்சவரம்பு சட்டம் பெரிய பண்ணைகள் அமைவதற்கு எதிராக செயல்படும்.

*நமது நாட்டில் நில உச்சவரம்பு விட குறைந்த அளவு எவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாம் என்ற அடிமட்ட வரம்பு மூலம் நிலம் துண்டாட படுவதைத் தடுப்பது தேவையாகும்.

*நிலமற்ற விவசாயிகளின் நில பசியை தீர்க்கும் அளவுக்கு நிலம் எச்சமாக இல்லை.

*எச்ச நிலத்தை எடுக்க அரசு கொடுக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை அரசுக்கு பாரமாக இருக்கும்.

*நகர வருவாய்க்கு உச்சவரம்பு கட்டாமல் நிலவுடைமை க்கு மட்டும் உச்சவரம்பை நிர்ணயிப்பது அறமாகாது.

சிக்கல்கள்:. நில உச்சவரம்பு சட்டத்தை கொண்டு வந்து செயல்படுத்துவதில் பல சிக்கல்கள் உள்ளன.

1.எதிர்காலத்தில் மிகுதியாக நிலம் வாங்குவதை தடை செய்வது எளிதாக இருக்கும் ஆனால் முன்பே நிலத்தை வைத்திருப்பவர்களிடம் இருந்து நிலத்தை பெறுவது சிக்கலான செயலாக இருக்கும்.

2. நில உச்சவரம்பு சட்டம் வருவதை அறிந்தவுடன் பெரிய நிலக்கிழார்கள் தங்களிடமுள்ள எச்ச நிலத்தை கை மாற்றி விடுகின்றனர்.

3. நில உச்சவரம்பு அளவை நிர்ணயிப்பதிலும் கருத்து வேறுபாடு எழுகின்றது.

4.எத்தகைய நிலங்களுக்கு நில உச்சவரம்பு சட்டத்தில் இருந்து விலக்கு அளிப்பது என்ற சிக்கல் தோன்றுகின்றது.

5. எச்சமாக இருந்து பெறுகின்ற நிலத்திற்கு எப்படி இழப்பீடு வழங்குவது என்பதையும் மற்றவர்களிடமிருந்து எப்படி

நிலத்திற்குரிய கிரயத்தை பெறுவது என்பதையும் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

6.எச்ச நிலத்தை பகிர்ந்தளிப்பது மட்டும் வேளாண்மை உற்பத்தி கூடாது புதிதாக நிலம் பெறுகின்ற விவசாயிகளுக்கு சாகுபடி செய்வதற்கு தேவையான பணம் கடனாக கிடைக்க அரசு ஆவணம் செய்ய வேண்டும்.

## சட்டங்களும் முன்னேற்றமும்

பல மாநிலங்களில் நில உச்சவரம்பு சட்டத்தை இயற்றி செயல்படுத்துகின்றனர் இதுவரை 20 லட்சம் ஏக்கர் நிலத்தை உச்சவரம்பு சட்டத்தின் மூலம் பெற்று மாநில அரசுகள் பகிர்ந்து அளித்துள்ளன மேற்கு வங்காளத்தில் 7.7 7 இலட்சம் ஏக்கரும் ஜம்மு-காஷ்மீரில் 45 இலட்சம் ஏக்கரும் பஞ்சாபில் 3.6 9 லட்சமும் உத்தரப்பிரதேசத்தில் 2.23 லட்சமும் மகாராஷ்டிரத்தில் 1.63 லட்சமும் மத்திய பிரதேசத்தில் 67 ஆயிரத்து 700 ஏக்கரும் குஜராத்தில் 39000 ஏக்கரும் அசாமில் 34000 ஏக்கரும் தமிழகத்தில் 20000 ஏக்கரும் உச்சவரம்பு சட்டத்தின் மூலம் பெறப்பட்டது.

நில உச்சவரம்பு சட்டத்தால் எதிர்பார்த்த பலன் விளையவில்லை இதற்கு அடிப்படையான காரணம் டேனியல் தார்னர் கூறுவதைப் போல நில உச்சவரம்பு சட்டங்களை இயற்றுவதும் செயல்படுத்துவதிலும் ஏற்பட்ட காலதாமதம் ஆகும். சட்டங்கள் வருவதைப் பற்றி மிகுதியாக பேசப்பட்டது பெரிய நிலக்கிழார்கள் எச்சரிக்கையாக தங்களிடமிருந்த மிகுதியான நிலத்தை பிரித்து உறவினர்களின் பெயரில் எழுதி வைத்த வேறு முறைகள் மூலமும் சட்டத்தின் பிடியிலிருந்து நழுவி விட்டனர் சட்டங்களை செயல்படுத்துவதில் அரசு திறமையோடும் தீவிரமாகவும் நடந்து கொண்டிருந்தால் மிகுந்த பலன் விளைந்திருக்கும்.

## நிலச் சீர்திருத்தங்கள் மதிப்பீடு:

1963இல் ஜிஎல் நந்தாவின் தலைமையில் அமைந்த நிலச்சீர்திருத்த செயல்பாட்டு குழு 1964இல் அளித்த அறிக்கையில் நிலச் சீர்திருத்தங்களை கொண்டு வருவதில் இருக்கும் கீழ்க்கண்ட குறைகளை சுட்டிக் காட்டுகின்றது.

1.சட்டங்களை செயல்படுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் இருக்கின்ற நிர்வாக அமைப்பு முறை போதுமானதாக இல்லை.

2.குத்தகை பதிவேடுகள் பல மாநிலங்களில் இல்லை இருக்கின்ற மாநிலங்களிலும் அவை சரிவர இன்றுவரை எழுதப்பட்டிருக்கவில்லை.

3.குத்தகை பயிரிடுவோரின் பொருளாதார நிலை மோசமாகவே இருக்கின்றது.

4.பல மாநிலங்களில் நில குத்தகைதாரர் களுக்கு சட்டத்தின் மூலம் அளித்து இருக்கின்ற பாதுகாப்பு தற்காலிகமானதாகவே இருக்கின்றது.

5.பல இடங்களில் குத்தகைதாரர்கள் தாங்களே விரும்பி சாகுபடி செய்த நிலத்தை விட்டு செல்வதை போன்ற வெளி தோற்றத்தோடு கட்டாயத்தின் பேரில் வெளியேற்றப்படுகின்றனர்.

6.நிலக்கிழார்கள் குத்தகை நிலத்தை திரும்ப பெறலாம் என்றிருக்கும் உரிமையைப் பயன்படுத்தி நிலக்கிழார்கள் குத்தகைதாரர்கள் வெளியேற்ற முடிகின்றது.

7. பல மாநிலங்களில் வாரத்தை இன்னும் பாதியாக குறைக்க வேண்டியுள்ளது.

8.குத்தகைதாரர் அவர்களின் உரிமைகளை காப்பாற்ற வேண்டுமானால் அரசு தலையிட்டு குத்தகை பணத்தை பெற்று நிலக்கிழார்கள் கொடுக்கும் முறை வரவேண்டும்.

9.நில உச்சவரம்பு சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும் பொறுமையான நிலை மாறுதல்களால் அவற்றை சரியாக செயல்படுத்த இயலவில்லை.

திட்டக்குழு நில சீர்திருத்தங்கள் செயல்பட்ட முறையை ஆராய்ந்து சில குறைகளை சுட்டிக் காட்டியுள்ளது.

1. உறுதியான விருப்பத்தோடுஅரசியல்வாதிகள் செயல்படவில்லை கூறுகின்ற கொள்கைகளுக்கும் செயல்பாட்டுக்கும்இடையில் பெரிய இடைவெளி இருக்கின்றது.

2.கீழ்மட்டத்தில் இருந்து விவசாயிகள் நிலம் கேட்டு போராட்டம் நடத்திய வேறு வகையிலோ நெருக்கடியை ஏற்படுத்தும் நிலை இல்லை.

3.அரசு வேளாண்மை நிதி வழிமுறைகள்எந்திரத்தின் மனப்பான்மையும் மெதுவாக செயல்படும் போக்கும் மாற்றங்களுக்கு தடையாக இருக்கின்றன.

4.நீதிமன்றங்களின் உதவியோடு பல சீர்திருத்த சட்டங்கள் செயல்படுவதை ஒத்திப்போட செய்துவிடுகின்றனர்

5. சரியான பதிவேடுகள் ஆவணங்கள் இல்லை.6. நில சீர்திருத்த சட்டங்களை செயல்படுத்த வேண்டிய நிதி ஒதுக்கப்படவில்லை.

நிறைவுரை: அவர்களுக்கு நிலம் சொந்தம் என்பது நடைமுறைக்கு வராமல் நிலவுடைமை முறையில் இருக்கும் குறைகளை போக்க முடியாது நிலவுடைமை முறை சிக்கலை தீர்க்காமல் வேளாண்மையில் புரட்சியை ஏற்படுத்த முடியாது இப்பொழுது காகிதத்தில் இருக்கின்ற சட்டங்களை உண்மையாக உறுதியாக நம்பிக்கையோடு செயல்படுத்தினால் நமது நாட்டில் ஒரு பெரிய மாற்றம் ஏற்படும் என்று கூறலாம்.

3. வேளாண்மை நிதி வழிமுறைகள்

. வேளாண்மைகடன் மூலங்கள்

விவசாயிகளின் குறுகிய கால இடைக்கால நீண்ட கால நிதி தேவையும் அளவும் வளர்ந்து வருகின்றது விவசாயிகளுக்கு கிடைக்கின்ற வழிமுறைகளை

1.*நிறுவனங்கள்(institutional sources)

2. தனியார் மூலங்கள் (private sources) என்று இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

அரசு கூட்டுறவு சங்கங்கள் வணிக வங்கிகள் ஆகியவற்றிடம் இருந்து விவசாயிகள் பெறுகின்ற கடன் நிறுவனம் வழிமுறைகளை சாரும்.

லேவாதேவி காரர்கள், வணிகர்கள், உறவினர்கள், நிலக்கிழார்கள் போன்றவர்கள் இடம்பெறுகின்ற கடன்கள் தனியார் வழிமுறைகள் அல்லது நிறுவனம் மற்ற வழிமுறைகளை சாரும்.

விவசாயிகளுக்கு கிடைத்த கடன் மூலங்களில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது 1952 இல்நிறுவனமமற்ற மூலங்களில் விவசாயிகள் 92.7 சதவீத கடன் பெற்றனர் 1981இல் இம்முறையில் பெற்ற கடன் அளவு 36.8 சதவீதமாக குறைந்துள்ளது. இக்காலத்தில் நிறுவனங்களின் மூலம் பெற்ற கடன் 7.3 சதவீதத்திலிருந்து 63.2சதவிகிதமாக கூடியிருக்கின்றது. இது வரவேற்கத்தக்க கடன் அமைப்பு முறையின் மாற்றமாகும்.

நிறுவனமற்றநிதி மூலங்கள்(Non-institutional sources)

1. லேவாதேவிக்காரர்கள்:

நாடு விடுதலை பெற்ற பொழுது கிராம கடனை லேவாதேவி காரர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர்.இதனால் கிராம பொருளாதாரமே லேவாதேவி காரர்களின் கைக்குள் சிக்கித் திணறியது கடந்த சில ஆண்டுகளில் இவர்களது முக்கியத்துவம் பெரிதும் குறைந்துள்ளது.1951-52 இல் மொத்த கடனில் லேவாதேவி காரர்கள் 69 புள்ளி 7 சதவீதம் கொடுத்தனர். இது 1981இல்16.1 சதவிகிதமாக குறைந்தது.

லேவாதேவி காரர்களை இருவகையாகப் பிரிக்கலாம் ஒரு வகையினர் கடன் கொடுத்து வாங்குவதையே முழுநேர தொழிலாக கொண்டவர்கள் மற்றொரு பிரிவினர் வாணிபம் அல்லது விவசாயம் செய்து கொண்டே லேவாதேவி தொழில் செய்பவர்கள்.

லேவாதேவி முறையில் பல குறைகள் உள்ளன:

1.பல வகையான ஏமாற்று முறைகளை பின்பற்றுகின்றனர் எழுதாத பத்திரங்களில் கையெழுத்து வாங்கிக்கொண்டு பின்னர் விருப்பம்போல் தொகையை எழுதிக் கொள்வார்கள்.

2.அதிக வட்டி வாங்குவார்கள் முதலிலேயே வட்டியை கழிப்பது கூட்டு வட்டி வாங்குவது போன்ற முறைகளை பின்பற்றுவார்கள்.

3. தவணையாக செலுத்தும் பணத்திற்கு வட்டியை குறைப்பதில்லை.

4.விளை பொருளை தங்களுக்கே குறைந்த விலைக்கு விற்கும்படி கட்டாயப் படுத்துவார்கள்.

2. வணிகர்கள்:

கிராமங்களில் இருக்கின்ற வணிகர்களும் வாணிபம் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் விவசாயிகளின் உற்பத்தி நோக்கங்களுக்காக கடன் கொடுப்பார்கள்.குறிப்பாக பண விலை பொருளான பருத்தி இரும்பு வத்தல் கடலை புகையிலை ஆகியவற்றின் உற்பத்திக்கு கடன் கொடுத்து கட்டாயப்படுத்தி குறைந்தவிலையில் அவற்றை வாங்குவதில் குறியாக இருப்பார்கள்.1950-51இல்5.5 சதவிகிதமாக இருந்த இவர்களின் பங்கு 1981இல்3.2 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. இவர்கள் ஓரளவு லேவாதேவி காரர்களை போலவே நடந்து கொள்வார்கள்.

3. உறவினர்கள், நண்பர்கள்:

விவசாயிகள்உறவினர்கள் நண்பர்களிடம் இருந்து தேவைக்கு கடன் பெறுகின்றனர்.லேவாதேவி காரர்களை விட குறைவான வட்டிக்கு இவர்கள் கடன் தருவார்கள். அறுவடை முடிந்த உடன் கடனை திரும்ப பெறுவார்கள். இத்தகைய கடன்கள் போதுமான அளவில் உறுதியாக கிடைக்கும் என்று கூற முடியாது. இம்முறையின் பங்கு 1951-52இல்14.2 சதவிகிதமாக இருந்தது.1981இல்8.7 சதவிகிதமாக குறைந்து விட்டது.

4. நிலக்கிழார்களும் பிறரும்:

பெரிய நிலக்கிழார்கள் சிறிய விவசாயிகளுக்கும் குத்தகைதாரர் களுக்கும் கூடுதல் வட்டிக்கு கடன் கொடுக்கின்றனர். இவர்கள் செயல்முறை லேவாதேவி காரர்களை போலவே இருக்கும். இவர்கள் கடன் பெற்றவர்களின் நிலத்தை கைப்பற்றுவதில் கவனமாக இருப்பார்கள். நிலமற்ற கூலி விவசாயிகள் பெருக இவர்கள் தான் காரணம். இவர்களின் பங்கு 1951-52இல்3.3 சதவீதமாக இருந்து 1981இல்8.8 சதவீதமாக கூடியுள்ளது.

மதிப்பீடு:. தனியார் துறையின் விவசாய கடன் மூலங்களில் பல குறைகள் உள்ளன இவை விவசாயிகளுக்கு உதவுவதை விட அவர்களை நிரந்தர கடன்காரர்கள் ஆக வைத்திருக்கவே முயல்கின்றன ஆதலால் இவற்றை கட்டுப்படுத்தவும் மாற்று நிறுவனம் முறைகளை பின்பற்றவும் அரசு தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது.

3. நிறுவனக் கடன் மூலங்கள் (Institutional sources)

விவசாயிகளுக்கு உண்மையில் நிறுவன கடன் மூலங்கள் உதவுகின்றன குறைந்த வட்டியில் கடன் கொடுத்து விவசாயிகள் தடங்கலின்றி உற்பத்தியை தொடர துணை செய்கின்றன நிறுவனங்கள் கடன் கொடுப்பதோடு பிற தொடர்புடைய சேவைகளையும் செய்து விவசாயிகளின் வாழ்வில் வளம் சேர்க்க துணை செய்கின்றன ஆதலால் முக்கியமான வேளாண்மை கடன் வழங்கும் நிறுவனங்களை ஆராயலாம்.

நிறுவன கடன் மூலங்கள்:

விவசாயிகளுக்கு உண்மையில் நிறுவன கடன் மூலங்கள் உதவுகின்றன குறைந்த வட்டியில் கடன் கொடுத்து விவசாயிகள் தடங்கலின்றி உற்பத்தியை தொடர துணை செய்கின்றன நிறுவனங்கள் கடன் கொடுப்பதோடு பிற தொடர்புடைய சேவைகளையும் செய்து விவசாயிகளின் வாழ்வில் வளம் சேர்க்க துணை செய்கின்றன ஆதலால் முக்கியமான வேளாண்மை கடன் வழங்கும் நிறுவனங்களை ஆராயலாம்.

1. கூட்டுறவு கடன் சங்கங்கள்:

விவசாயிகளுக்கு கடன் கொடுக்க சிறந்த முறையாக கூட்டுறவு கடன் சங்கங்கள் இருக்கின்றன இவை குறைந்த வட்டியில் குறுகிய கால நடுத்தர கால கடன்களை தருகின்றன நமது நாட்டில் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கும் நோக்கத்தில் தான் முதன்முதலில் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டன.

வளர்ச்சி:கிராம நிலையை பணி செய்கின்ற ஆரம்ப வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் விரைவாக வளர்ச்சி அடைந்தன 1051 விவசாயிகளின் கடன் தேவையில் 3.3 சதவீத கடன் அளித்த கூட்டுறவு சங்கங்கள் ஆயிரத்து 981 29.9 சதவீத கடனை வழங்குகின்றன.

1960 61 நமது நாட்டில் 2 லட்சத்து 12 ஆயிரம் ஆரம்ப கூட்டுறவு சங்கங்கள் இருந்தன. 1970 71 ஒரு லட்சத்து 61 ஆயிரம் ஆகவும் 1990 லவ் 88 ஆயிரம் ஆகும் குறைந்துள்ளது. விவசாயிகளுக்கு கொடுத்த கடன் அளவு 1951இல் 23 கோடியாக இருந்தது ஆயிரத்தி தொள்ளாயிரத்து 91 இல் 4230 கோடி ரூபாய் ஆகும் 1998ல் 16 ஆயிரத்து 987 கோடியாகவும் கூடியுள்ளது .

சிறப்புகள்:கூட்டுறவு சங்கங்கள் நாடு முழுவதும் பரவியுள்ளன ஆதலால் விவசாயிகளின் கைக்கு எட்டும் தூரத்தில் குறைந்த வட்டியில் கடன் கிடைக்கிறது கூட்டுறவு சங்க நிர்வாகிகள் உள்ளூர் நடப்புகளை அறிந்து மக்களை புரிந்து கொண்டு செயல்படுகின்றன மக்களுக்கு உதவி அளிக்கின்றன பெண்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிரிவினருக்கும் தனிசிறப்பு திட்டங்களின் மூலம் கடனுதவி அளித்து உதவுகின்றன.

சிக்கல்கள்:. கூட்டுறவு சங்கங்களின் செயல்பாட்டில் இருக்கும் பெரிய குறை கொடுத்த கடனை உரிய காலத்தில் திரும்ப பெற இயலாமை ஆகும் இப்பொழுது கூட்டுறவு சங்கங்களால் வசூலிக்க முடியாமல் வெளியில் நிற்கும் நிலுவை

கடன் ரூபாய் 3000 கோடி அதாவது அகில இந்திய நிலையில் கூட்டுறவு சங்கங்கள் கொடுத்த கடனை 45 சதவீதமும் தமிழ்நாட்டில் 23 சதவீதமும் பீகாரில் 77 சதவீதமும் வெளியில் நிற்கின்றன.

குறைகள்:. 1.குத்தகைதாரர் களும் வாரத்திற்கு சாகுபடி செய்பவர்கள் நிலமற்ற விவசாயக் கூலிகள் கிராம கைவினைஞர்கள் ஆகியோருக்கு தேவையான அளவு கடன் கிடைக்கவில்லை.2.விவசாயிகளுக்கு கொடுக்கின்ற கடன் போதுமானதாகக்இல்லை.3.எல்லா மாநிலங்களிலும் ஒன்றுபோல் கூட்டுறவு

கடன் சங்கங்கள் வளரவில்லை.4.கிராம மக்கள் முழுமையாக கூட்டுறவு சங்கத்தின் கீழ் வரவில்லை.5.கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகம் செம்மையாக இல்லை.

2. நிலவள வங்கிகள் (land Development Banks):

விவசாயிகளுக்கு அவர்களது கடன் சுமையைக் குறைக்கவும் நிலத்தில் சில நிலையான ஆக்கப் பணிகளை மேற்கொள்ளவும் நீண்டகால கடன் தேவைப்படுகின்றது.உண்மையில் நமது நாட்டில் நில அடமான வங்கியின் வரலாறு 1929 இல் சென்னையில் கூட்டுறவு முறையில் அமைக்கப்பெற்ற மைய நில அடமான வங்கியோடுதொடங்குகின்றது என்று கூறலாம்.

இது கடன் பத்திரங்களின் மூலம் தனது மூலதனத்தை தேடியது சென்னை மாநிலத்தில் நில அடமான வங்கி முறை வளர்ந்தது மற்ற மாநிலங்களிலும் நில அடமான வங்கிகளை அமைக்க தூண்டுதலாக அமைந்தது பம்பாயிலும் மைசூரிலும் நில அடமான வங்கிகளை ஏற்படுத்தினர் மத்திய பிரதேசத்திலும் வங்காளத்திலும் மாநில கூட்டுறவு வங்கிகள் நிலத்தை கவனிக்க தனி பிரிவுகளை உருவாக்கி ஒரிசாவில் மாநிலமான வங்கிப் பணியை மேற்கொண்டது தமிழ்நாடு கர்நாடகம் ஆந்திரா மாநிலங்களில் மட்டும் 65% வங்கிகள் காணப்படுகின்றன.

1950- 51 இல் 286 முதல் நிலை நில அடமான வங்கிகள் இருந்தன 1991-1992இல் முதல் நிலை நில வங்கிகளின் எண்ணிக்கை 1850.1991-93 இல் இவை ரூபாய் 1010 கோடி கடன் அளித்திருந்தன. வசூலிக்காமல் இருந்தது ரூ.3500 கோடி

நில அடமான வங்கி செயல்படுத்துவதில் உள்ள சில குறைகளை சுட்டிக் காட்டலாம் முதலாவதாக இது எந்த அளவிற்கு வளர்ந்து விவசாயிகளின் நீண்ட கால கடன் தேவையை தீர்த்து இருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு வளரவில்லை நில அடமான வங்கிகள் கொடுத்திருக்கின்றார் கடன் மொத்த கடன் தேவையில் மிகவும் குறைவானதால் கடலில் பெருங்காயத்தை கரைத்தாற்போல் அவை செய்த பணி வெளியில் தெரியவில்லை இரண்டாவதாக நில அடமான வங்கிகள் கடன் பத்திரங்களின் மூலம் போதுமான அளவு மூலதனத்தை திரட்ட முடியவில்லை மூன்றாவதாக கடன் கொடுக்கின்ற அளவும் வட்டி விகிதங்களும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது நிலத்தை சீர்திருத்த

புதிய முறையில் சாகுபடி செய்யும் அளவிற்கு தேவையான அளவு கடன் கிடைப்பதில்லை நான்காவதாக இத்தகைய வங்கிகளில் பணியாற்றுகின்ற விவசாயிகளின் நிலையை நன்கு அறிந்தவராக இல்லை நிலத்தின் மதிப்பையும் கடனின் இன்றியமையாது தன்மையையும் அறிந்து கடன் கொடுக்கும் நிலை தோன்றவில்லை

நில வங்கிகளின் வெற்றி:
அடமானமாக கொடுக்கும் நிலத்தின் மதிப்பை சரியாக கழிப்பதிலும் கடன் வாங்குபவரின் திரும்ப செலுத்துகின்ற தீர்மானிப்பதிலும் கடன் காலத்தையும் திரும்ப செலுத்தும் அளவையும் சமநிலை படுத்துவதிலும் உரிய காலத்தில் கடனை வசூலிப்பதிலும் அடங்கியுள்ளது என்று வங்கி வல்லுறர்கள் குறிப்பிடுகின்றனர்.

iii) வணிக வங்கிகள்:
விவசாயிகளின் குறுகிய கால கடன் தேவையை தீர்ப்பதில் வணிக வங்கிகள் குறிப்பிடத்தக்க அளவில் பணிபுரிய முடியும் ஆனால் நீண்ட காலமாக நமது நாட்டு வணிக வங்கிகள் வாணிபம் தொழில் வளர்ச்சிக்கும் கடன் கொடுப்பதில் காட்டிய ஈடுபாட்டை வேளாண்மை கடன் அளிப்பதில் காட்டவில்லை.

எல்லா வணிக வங்கிகளும் இணைந்து வேளாண்மை கடனில் கவனம் செலுத்த வேளாண்மை நிதி கழகத்தை நிறுவியுள்ளன.இதனுடைய ஒப்புக்கொள்ள பெற்ற மூலதனம் 100 கோடி ரூபாய் இதன் செலுத்த பெற்ற முதல் 5 கோடி ரூபாய் இந்த கழகம் 20000 நீர்ப்பாசன கிணறுகளை அமைக்க 5 மாநில மின்சார கழகங்களுக்கு 7.6 கோடி ரூபாய் கடன் அளித்துள்ளது.

1969 இல்வணிக வங்கிகள் வழங்கிய வேளாண்மை கடன் ரூபாய் 44 கோடி இது 1991-92 இல் ரூ 5690 கோடியாக கூடியுள்ளது.

IV. வட்டார கிராம வங்கிகள்
சீரிய இறுதிநிலை விவசாயிகளுக்கு வேளாண்மை கூலிகளும் கைவினைஞர்களுக்கு , சிறிய தொழில் முயல்பவர்களுக்கு வேளாண்மை வாணிபம் தொழில் ஆகியவற்றை கிராமப்புறங்களில் வளர்ப்பதற்காக வட்டார கிராம வங்கிகள் அமைத்தனர் 1975 அக்டோபர் 2 ல் முதன் முதலில் 5 வட்டார கிராம வங்கி கிளை நிறுவினர் ஒவ்வொரு வங்கியின் அங்கீகரிக்க பெற்ற மூலதனம் ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில் 50 சதவீதத்தை மத்திய அரசும் 15 சதவீதத்தை மாநில அரசும் 35 சதவீதத்தை இதனை செயல்படுத்தும் வணிக வங்கிகளுக்கும் வழங்குகின்றன.

1995 மார்ச்சில் நமது நாட்டில் 23 மாநிலங்களில் 196 வட்டார கிராம வங்கிகள் 14.5 46 கிளைகளோடு செயல்பட்டன ரூ.
3560 கோடி கடன் அளித்து இருந்தன இவை வழங்கிய கடன் 90% பலகீனமான மக்களுக்கு சென்றுள்ளது.

கிராமங்களில் தேவையான கடன் அளிப்பதில் வட்டார கிராம வங்கிகள் குறிப்பிடத்தக்க பணிபுரிகின்றன கிராமங்களிலுள்ள லேவாதேவிக்காரர்களை முற்றிலும் அகற்றும் நோக்கத்தோடு செயல்படுகின்றன தெரிந்தெடுத்த பயனாளிகளுக்கு கடன் கொடுப்பதில் சாதனை செய்துள்ளனர் குறிப்பாக தாழ்த்தப்பட்ட இடங்களுக்காக சில திட்டங்களை மேற்கொண்டு ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்கின்றன இந்திய ரிசர்வ் வங்கியின் மதிப்பீட்டின் படி வட்டார கிராம வங்கிகள் நோக்கங்களை நிறைவேற்றுவதில் திறமையாக வெற்றி பெற்றுள்ளன.

V. வேளாண்மை கிராம வளர்ச்சிக்கான தேசிய வங்கி.

1982 ஆம் ஆண்டு ஜூலையில் நாடாளுமன்ற சட்டத்தின்படி வேளாண்மை கிராம வளர்ச்சிக்கான தேசிய வங்கியை நிறுவினார் இந்திய ரிசர்வ் வங்கியின் வேளாண்மை கடன் பணிகளையும் வேளாண்மை வளர்ச்சி கழகத்தின் பணிகளையும் செய்யும் நோக்கத்தோடு இதனை அமைத்தனர் இதனுடைய மூலதனத்தில் பாதியை இந்திய அரசும் பாதிக்யும் வழங்குகின்றன.

மாநில கூட்டுறவு வங்கிகளுக்கு வட்டார கிராம வங்கி பிற நிதி நிறுவனங்களுக்கும் குறுகிய கால இடை கால நீண்ட கால கடன்களை வழங்குகின்றது.

மத்திய மாநில அரசுகள் திட்ட குழு மற்றும் கிராம சிறு தொழில் வளர்ச்சிக்கான அகில இந்திய மாநில நிறுவனங்கள் ஆகியவற்றின் பணிகளை இணைக்கும் பொறுப்பை ஏற்று செயல்படுகின்றன.

மண்டல கிராம வங்கிகள் கூட்டுறவு வங்கிகள் பிற நிதி நிறுவனங்களை மேற் பார்க்கின்ற பணிகளையும் செய்கின்றன மேலும் வேளாண்மை கிராம வளர்ச்சி தொடர்பான ஆய்வினை ஊக்குவிக்க ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி ஒன்றையும் நிறுவி உள்ளது.

வேளாண்மை கிராம வளர்ச்சிக்கான தேசிய வங்கி வேளாண்மை கிராம வளர்ச்சிக்கான எல்லா வகையான கடன்களையும் ஒருங்கிணைந்த முறையில் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும் இது 1990- 91 ரூ 3920 கோடி குறுகிய கால கடன் வழங்கியுள்ளது இது 1990-91 ஆம் ஆண்டில் 89.510 திட்டங்களுக்காக ரூபாய் 18 300 கோடி கடன் வழங்கியுள்ளது இவற்றில் 36320 சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு 1940 கோடி கடன் அளிப்பது போற்றதகுந்த பணிஆகும்.

இந்திய வங்கி வேளாண்மை கிராம வளர்ச்சிக்காக வேண்டிய கடன் உதவிகள் செய்வதால் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம்.

## 4. உணவுக் கொள்கை

(Food policy)

மனிதனின் இன்றியமையாத தேவைகளில் உணவை வழங்கும் பொறுப்பு வேளாண்மை இடமிருக்கின்றது இந்திய அரசியல் சட்டம் ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் குழந்தைக்கும் உணவை பெறவும் உழைக்கவும் கல்வி மருந்து வேலை வாய்ப்பு என்ற வசதிகளைப் பெறவும் உரிமையை வழங்குகிறது ஆனால் நடைமுறையில் இவற்றை பெறுவதில் சிக்கல்கள் உள்ளன.

இன்று உலகையே ஆட்டிப் படைக்கின்ற நோயாக வறுமையும் அதனை சார்ந்து பசியும் உள்ளன நமது நாட்டிலும் பஞ்சமும் பசியும் தொடர்கின்றன டாக்டர் டிவி சுகத்மே உலகில் 10 பேருக்கு 4 பேர் பட்டினி ஆக இருக்கின்றனர் அவர்களில் ஒருவர் இந்தியர் ஏறத்தாழ நமது மக்களில் 10 சதவிகிதத்தினர் சத்து குறைந்த உணவை சாப்பிடுகின்றனர் ஆதலால் பட்டினியால் பரிதவிக்கின்றனர் என்கின்றார்.நாடு விடுதலை பெற்ற 55 ஆண்டுகளுக்கு பிறகும் என் நிலை தொடர்வதால் உணவுகளைப் பற்றி தனியாக ஆராய்வதும் தீர்ப்பதும் தேவையாகின்றது.

### I. உணவு கொள்கையின் நோக்கங்கள்

1. உற்பத்தியில் தன்னிறைவு அடைதல்
2. சமச்சீராக பகிர்ந்தளித்தல்
3. உற்பத்தியிலும் பகிர்வில் உம் விலையை நிலைப்படுத்துதல்.

### II. உணவு கொள்கையை செயல்படுத்தும் வழிமுறைகள்

(I) கொள்முதல்
(2) பகிர்வு
(3) விலைக் கொள்கை

III. அரசின் உணவுக் கொள்கை மதிப்பீடு

